[illegible]

നോവൽ ൪ വാല്യം-൬

3L
R65 ..., N11 VD
N31...6.
186802.

814

பாபாலால்—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனுபஜார் ரோட், சென்னை.

Reg. No. M· 916

॥ ஸ்ரீ: ॥

No. 2 to 4 ...

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 21] பிரமோதூதவூ மாசி—பங்குனிமீ [ஸஞ்சிகை 5—6

15 MAY 1931

ஸம்பாதகர்—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்

வருஷ சந்தா ரூ. 3] **Feb. & March, 1931** [ஸஞ்சிகை 1-க்கு அணு 6.

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	மதங்களின் சாயைகள்— ஸ்ரீ. உப. வெ. ராம. நரஸிம்ஹாசார்யர்	37
2.	மஹா கவி ஹ்ருதய காம்பீர்யம்— ஸ்ரீ உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்	48
3.	ஸ்ரீ குணரத்ந கோசம்— ஸ்ரீ. உப. வித்வாந் ஏ. வி. கோபாலாசாரியர் .... எம்.எ., பி.எல்.	54
4.	உபய வேதாந்த ப்ரவர்த்தன ஸபா	61
5.	ஸம்பாதகீயம்	63
6.	ஸ்ரீ. வேதார்த்த ஸங்க்ரகம்— ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யர்	297

ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி.

இதில் பகவத்கீதை, ஈசகேனதைத்ரீயாதி உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள் ஸந்தியாவந்தன, புருஸூக்த ருத்ரஸாமகாதி வேத மந்திரங்கள், தர்க்க ஸங்க்ரஹம், கௌமதி வியாகரண ஸூத்ரம், ஸித்தாந்த கௌமதி இவைகளிலிருந்து பதங்களின் அர்த்தங்களுக்கெதிரே உத்தியோகஸ்தர், வியாபாரஸ்தர், வைதீகர், பயிர்த் தொழிலாளர், முதலிய யாவரும் எளிதில் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்கும் வண்ணம் உதாஹரணங்களையும் இதர ஸௌகர்யங்களையுங்காட்டி க்ரந்த எழுத்தில் ராயல் 8 சைசில் கிளேஸ் கடிதத்தில் இடங்களைச் சற்றும் வீணுக்காது அச்சிடப்பட்டு வருகின்றன. வேதாந்த, நியாய, மீமாம்ஸா நாட்ய ஜ்யோதிஷ பரிபாஷைகளும் சிற்சில விடங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. முதல் பாகம் சுமார் 200 பக்கம் தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 2. முழுபுஸ்தகமும் 6-ரூபாய்க்கு மேலாகு மாதலால் ஒரு மாதத்திற்குள் 5-ரூபாய் அனுப்பிவிட்டால் முதல் பாகத்தை உடனே அனுப்பி இரண்டாவது பாகம் இனமாக 'மோக்ஷ வழி' என்னும் 8 அணு விலையுள்ள அருமையான புஸ்தகத்தோடு இனிவேறு சார்ஜ் ஒன்றும் செய்யாமல் ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மோக்ஷவழி

இது பகவத்கீதை, உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள், தர்மசாஸ்திரம், தமிழ் வேதம் இவைகளை ப்ரமாணமாகக் கொண்டு அத்வைத த்வைத விசிஷ்டாத்வைத மும்மதங்களையு மனுசரித்து இக்கலியுகத்தில் சுலபத்தில் பாவங்களைத் தொலைத்துக்கொண்டு நற்கதியடைய பெரியோர்கள் அனுஷ்டித்த சுலபமான வழிகளையும், உலகத்தில் நாம் பார்ப்பவைகளையும் அவைகளால் தெரிந்து கொள்ளுபவைகளையும் நாம் இருக்கவேண்டிய முறைகளையும் எளிய தமிழ் நடையில் கூறுகின்றது. விலை அணு 8. தபால் சார்ஜ் ஒன்றுக்கும் இரண்டிற்கும் அணு நான்கே.

ஷை நூல் க்ரந்த ப்ரமாண தாத்பர்யங்களோடு ப்ராம்மணர்களுக்காக க்ரந்த தமிழ் நடையில் எழுதப்பட்டது தபால் சார்ஜ் உள்பட ரூபாய் ஒன்றே.

விலாசம்:—நே. ஈ. துரைஸ்வாமி ஐயங்கார்

பிரம்மஸாயுஜ்ய லைப்ரரி மானேஜர்,

நேமம் கிராமம், திருமழிசை போஸ்ட்

வழி பூந்தமல்லி, செங்கல்பட்டு ஜில்லா.

15 MAY 1981

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 21] பிரமோ. ௵ மாசி-பங்குனி௴ [ஸஞ்சிகை 5-6

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகர கௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ஸ்ரீ பாகவதம் 1-2-30]

மதங்களின் சாயைகள்.

[ஸ்ரீ. உப. வெ. ராம. நரஸிம்ஹாசார்யர்.]

[ஸம்பு 21. ஸஞ்சிகை 1—4, பக்கம், 23. தொடர்ச்சி.]

ஆமுஷ்மிக ஆனந்த லாபத்தின் கண்ணுள்ள பேராவலினுல் ஐஹிக லாபங்கள் அனைத்தும் அடியுடன் அழிந்து போகின்றன என்கிற அபாயம் மனதிற் பதிந்துவிட்டால் அப்போது மனிதர் பரம ஆஸ்திகரேயாயினும் நாஸ்திக்கியத்தை அவலம்பிப்பாராகின்றனர். ஸ்ரீமத்ராமாயணத்திலே இதற்குத் தக்க சில உதாஹரணங்களுண்டு. அவற்றுள் ஒன்றிரண்டு இங்கு எடுத்துக் காட்டுகின்றோம்.

சக்கிரவர்த்தித் திருமகனுர் பித்ருவாக்கிய பரிபாலன தர்மத்தில் விசேஷித்த சிரத்தையை வஹித்தார். அதனுல் மஹோதயமான ஸாகேத ஸாம்ராஜ்ய லாபத்தை அவமதித்தார். அதனைத் துறந்து கடுங்கானேற நினைத்தார். சித்திரகூடஞ் சென்று அங்கு சற்று தங்கியிருந்தார். தம்பி பரதாழ்வானும் அவரைத் திருப்பிக்கொண்டு வரவென் அங்கு செல்ருர். அடியற்ற மரம் போல அண்ணன் திருவடிகளின் கீழ் அவர் வீழ்ந்து தெண்டனிட்டார். குல குருவான வஸிஷ்டரையுங் கூட்டிக்கொண்டு அண்ணன் ஆளுவதினுல் ஆகக்கிடக்கின்ற

பிரஜா க்ஷேமாதிகளான அளவற்ற பலாபலங்களையும் [illegible]டார். அதன் பின்னரும் ஸ்ரீ இராகவன் தான் எண்ணியிருக்கும் தர்மமொன்றிலேயே நிலையாய் நின்று பரதன் பிரார்த்தனையை அதற்கு முகாந்தரமாகக் காட்டப்பட்ட ஸர்வப்பிரஜா அபிலஷிதங்களோடு அனுதரித்துத் தள்ளி விட்டாரன்றோ? அப்படி ஸ்ரீ இராமபத்திரனுடைய வரைகடந்த தர்ம சிரத்தையினால் ஸர்வப்பிரஜா க்ஷேமலாபங்களையும் பாழாக்கிவிட்ட அந்த ஸந்தர்ப்பமானது ஆஜன்ம சுத்தரான ஆஸ்திக சிரோமணியான ஜாபாலி என்கிற ஒரு பிராம்ஹணோத்தமரையும் பரம நாஸ்திகராக மாற்றிக் காட்டிவிட வில்லையா? அவர் பேசியதென்ன? "இராமபத்திர! தர்மப் பிராந்தியினால் ஹஸ்தப் பிராப்தமான அகண்ட ஸாம்ராஜ்ய ஸ்ரீயை உதறிவிட்டு கொடிய துன்பங்கள் பலவற்றிற்கும் இடமான காட்டிற்கும் போவது பெரிய முட்டாள் தனமல்லவா? அது தம்மைப் போன்ற மேதாவிகளாற் செய்யற்பாலதோ? ஸர்வ ஸமிருத்தமான இவ்வயோத்திமா நகரத்தில் ஸாம்ராஜ்யாபிஷிக்தராக ஸிம்ஹாஸனத்தின் மீது வெண் குடை நிழலிலமர்ந்து செங்கோல் செலுத்திக் கொண்டு கிடைத்தற்கரிய உரிமையுடன் நினைத்தற்கரிய இன்பங்களை யெல்லாம் நின்னவருக்கு அளித்துக் கொண்டு மகிழ்வுடன் வாழ்வீராக. உமக்கு பிதாவென்று இன்னும் எவரோ ஒருவர் இருக்கின்றாற் போலவும் அவரை இனியும் ஏதோ சில இன்ப துன்பங்கள் சாருவதற்குக் காத்துக் கொண்டிருக்கின்றாற் போலவும் ஏன் வீணாக பகற்கனவு காண்கின்றீர்? தசரதர் அன்றே எறிந்து சாம்பலாகி விட்டாரே! இனி அவருக்கென்று ஒரு பிண்டம் போடுவது கூட அன்னத்திற்கு தெண்டமே யன்றி அதனாலாவது ஒன்று மில்லையே? மறித்துப்போன அவரை எரித்துமான பிறகு, உண்டு களித்துக் கூத்தாடுவதற்கு யாருரிக்கின்றார்? எங்கு பிணம் விழப்போகிறதென்று காத்துக்கொண்டிருக்கின்ற சோம்பேறிப் பார்ப்பனக் கழுகுகளை யன்றி வேறெவரு மில்லை. இவ்வளவேயன்றி மறித்துப் போனவர் வெகு தூரத்திற்கு அப்பாலுள்ளதான ஏதோ ஒரு கண்காணாத உலகத்திற்குச் சென்றிருப்பதாகவும் ஆங்கவர் கொடிய பசியால் வாடி வருந்துவதாகவும் தாழிபோன்ற தமது உதரக்குழியை பக்ஷியத்தையும் பரமானத்தையும் மற்றவைகளையும் போட்டு தூர்த்துவிட்டால் அதனால் அவர்களுக்குள்ள வாட்டங்களெல்லாம் விலகி பித்ருக்கள் களிக்கூத்தாடுகின்றன ரென்றும் அப்பார்ப்பனப் போக்கிறிகள் கட்டுவதெல்லாம், கேவலம் பௌருஷமற்ற அப்பேடிகள் பதுங்கிக் கிடப்பதற்கான பொய்க் கோட்டையே யன்றி அதில் ஒரு அணுவளவாகிலும் உண்மை யென்பதில்லை. அந்த முட்டாள்களை யாமொன்று கேட்கின்றோம். அடா மூடர்களா! எங்கள் தந்தையர் திருப்தி யடைவதற்கென்று நீங்கள் வேண்டுகிறபடி உங்கள் தொப்பையை எப்பாடு பட்டாவது நிறப்புகின்றீர்கள். ஆனால் அப் பெரிய காரியப் பளுவை யாங்கள் நம்பிச் சுமப்பதற்கு சிறிய ஒரு ஸாக்ஷியத்தை யாகிலும் நீங்கள் காட்ட வேண்டாமா? எங்கள் தந்தையைப் பற்றி அப்புறம் பேசிக்கொள்வோம். அயலூருக்குச் சென்றிருக்கின்ற அண்ணனை யெண்ணி உமக்கு அன்ன மிடுகின்றோம். அதனால் அவர் திருப்தி பெற்றதாகச் சொல்லி யனுப்பட்டும்,

15 MAY 1981

அவ்வளவு கூட வேண்டாம். மெத்தை மேலிருக்கின்ற எங்கள் சித்தப்பாவினுடைய சிற்றுண்டியை உமது தொந்தி நிறம்பும்படி கொடுக்கின்றோம். அதில் ஒரு அம்சமாவது தனக்குக் கிடைத்ததென்று அவராவது சொல்லுவாரா, என்று கேட்டால் அவ்வீணர்கள் என்ன விடையளிப்பார்கள்? அந்த வம்பெல்லாம் எங்களுக்கு ஒன்றுந் தெரியாது. இதோ நாங்கள் விலாப் புடைக்கத் தின்று விட்டு வானம் பிளக்க ஏப்பத்தைத் தவிர்த்து விடுவதற்கான வேறு எந்த ஸாக்ஷியமும் எங்களிடமில்லை என்று பிதற்றுவது தானே? இராஜ குமார! படு முட்டாளாயிருப்பவன் எவனாவது இதை நம்பட்டும். தம்மைப் போன்ற மேதாவிகளின் செவியும் இக் கூற்றுக் கெல்லாம் இடங் கொடுக்கலாமோ? குமார! இஹமேயன்றி பரமென்பதொன்றில்லை. கண்டதேயன்றி காக்ஷி வேறில்லை. எனவே பரோக்ஷவாதத்தை பிடரியைப் பற்றி நெட்டித் தள்ளிவைத்து பிரத்யக்ஷ மொன்றையே போற்றி ஏற்றுக்கொள்ளும். மாயமான இவ்வாஸ்திக்கிய மூர்ச்சையினின்று மயக்கந் தெளிந்து எழுந்திரும். ஸர்வ ஜனத்திற்கும் நிதர்சனமாகக் காட்டக் கூடியதும் மெத்த மேதாவிகள் பலர் ஸஞ்சரித்து சுவடு பட்டிருப்பதுமான உத்தம நாஸ்திக்கிய மார்க்கத்தையே கடைப்பிடித் தொழுகி க்ஷேமமாய் வாழ்வீராக. காலில்விழுந்து கண்ணுங் கண்ணீருமாய் கரைந்து உருகுகின்ற உமது அருமைச்சகோதரனை பரதன் திருமுகத்தைச் சற்று திரும்பிப்பாரும். அவன் அன்புடன் பிரார்த்தித்துத் தருகிற ஸாகேத ஸாம்ராஜ்யத்தை தலைகுனிந்து ஏற்றுக்கொள்ளும். ஸ்வயம் ஸர்வதா ஸமிருத்தராய் ஸர்வதா உம்மையே வேண்டி நிற்கின்ற உமது பிரஜைகள் அடங்கவும் ஆனந்தித்துப் போருவதற்கான முறையில் திருவரவு புரிந்தருளும்." என்று அத்யந்த ஆஸ்திகரேயான அந்த பிராம்ஹணோத்தமரும் அத்தருணத்தில் பரம நாஸ்திகராக மாறி அவ்வாதத்தையே வற்புறுத்தினாரன்றோ?

186802

ஒரு தேஹத்தின் ஸ்வாக ஸ்திதிக்கு ரக்த்த விருத்தியே முக்கியமானதென்றாலும் அதுவும் அளவிற்கு மீறி அதிகரித்துப் போய்விட்டால் அதனால் ஏற்படவிருக்கின்ற அபாயத்திற்கு பயந்து நல்ல வைத்தியர்கள் தக்கபடி கணக்காக அதனை வெளிப்படுத்தி விடுகின்றனராம். அது போல மாந்தருடைய அபிவிருத்திக்கு ஆஸ்திக்கிய மென்பது ஒரு அரிய ஸாதனந்தானென்றாலும் அவ்வாஸ்திகப் பித்தம் எப்போதேனும் மண்டைக்கு ஏறிவிடுமானால் உடனே அதனை இறக்குவதற்கான வழியைத் தேடாதிருந்து விட்டால் அனர்த்தமாய் முடியுமன்றோ? ஆதலால் அப்பித்தத்தை இறக்குவதற்கு நாஸ்திக்கியமே பரம ஔஷதமாக மதிக்கப் பெற்றிருக்கின்றது. இதன் ஸேவனத்தினால் தலைமட்டுக் கொண்டிருந்த அப்பித்தம் தன்னிலைக்கு வந்து விட்டாலோ அதற்குப் பிறகு இவ்வௌஷதத்தை உட்கொள்ள வேண்டியது அவச்யமில்லையாதலால் சீரான ஆஸ்திக்கிய ஸ்தானத்திற்கு மாந்தர்கள் வந்து விடுகின்றார்கள். இந்த ஜாபாலி விருத்தாந்தத்தில் ஸ்ரீராமபத்திரன் அவர் செய்த நாஸ்திகவாதத்தில் வெறுப்புக்கொண்டு உம்மைப்போன்ற நாஸ்திகக் கள்வனை

R65 ... M31·21·54

அறிவாளியெவரும் கண்ணெடுத்துப் பார்ப்பதும் கூடாதென்று திக்கரித்து விட்டு பராங்முகமாய்த் திரும்பிவிட்டாரே! அப்போது அந்த ஜாபாலி சொன்ன தென்ன ?

“இராமசந்திர ! அடியேன் ஒரு நாஸ்திகனல்ல. பிரத்யக்ஷமான இத் தேஹாதிகளை விட பரோக்ஷமான ஆத்ம ராசிகளும் அவற்றின் கெதியான லோகாந்தரப் பிராப்த்தி முதலான பலவிசேஷங்களும் இல்லையென்பதில்லை. அவைகள் யாவும் உள்ளனவே தான் என்கிற இவ்வித நிர்ணயமுள்ள என்னை நாஸ்திக னென்னலாமோ ? ஆனாலும் இந்த ஸந்தர்ப்பமானது என்னையும் ஒரு நாஸ்திகனாகவே மாற்றிவிட்டது. அதனால் நாஸ்திக வாதத்தைத் தழுவிப் பேசுவது இப்போது எனக்கு மிக்க அவச்யமாயிற்று. எனது கோரிக்கை ஈடேறுங்காலத்தைக் கண்டுவிட்டேனாகில் பழையபடி பரம ஆஸ்திகனாகவே ஆய்விடுவேன். என்றாலும் அதற்கு அப்புறமும் என்றைக்கேனும் எனக்கு அவச்யந் தோன்றினால் அப்போதும் கூசாமல் நாஸ்திகனே யாவேன். அதெல்லாம் அந்தந்த ஸமயத்தைப் பொருத்திருக்கும். ஸமயத்தை யெல்லாம் நல்லதாகவே வைத்திருக்கவேண்டிய பொறுப்பு ‘ராஜா காலஸ்ய காரணம்’ என்கிறபடி உம்மீதே சுமந்திருக்கின்றது. அத்தகைய நீர் தர்மப்பித்தேறி தர்ம பலங்களும் தர்ம ஸாதனங்களுமான அர்த்தகாமங்களை அழிக்கப் பாராமல் திருவர்க்கத்தையும் ஒரு சீராக ஸேவித்தருளும். அதற்காகவே தான் அடியேன் இன்னாஸ்திக வாதத்தை வற்புறுத்தலானேன். இந்த ஸந்தர்ப்பத்தில் நாஸ்திகனாகியது யானொருவன்தா னென்றெண்ணவேண்டாம். இங்குள்ள வஸிஷ்டருள்ளிட்ட மற்றைய பெரியாரின் உள்ளத்தினுள்ளும் இப்போதிது பூர்ண ரூபத்தோடு பொங்கிக்கொண்டுதா னிருக்கின்றது. சூது வினையறியாத யானொருவன் தான் கள்ளங் கபடன்றி உள்ளத்திலுள்ளதை உள்ளபடியே வெளியிடுவோனாயினேன்” என்று சொல்லி முடித்தார் மஹர்ஷி ஜாபாலி.

ந நாஸ்திகாநாம் வசநம் ப்ரவீம்யஹம் ந நாஸ்திகோ(அ)ஹம் குஹ நாஸ்தி கிஞ்சந । ஸமீக்ஷ்ய காலம் புநராஸ்திகோ(அ)பவம் பவேய காலே புநரேவ நாஸ்திக: ।

ஸ சாபி காலோ(அ)யமுபாகத: ஶநை: யதா மயா நாஸ்திகவாகுதீரிதா । நிவர்த்தநார்த்தம் தவ ராமகாரணாத் ப்ரஸாதநார்த்தம் து மயைததீரிதம் ।

வஸிஷ்ட மஹர்ஷியும் இவர் தம் அபிப்பிராயத்தை அங்கீகரித்து நின்றே இராகவனுக்கு ஸமாதானங் கூறுகின்றார். “இராம! ஜாபாலிக்கு இவ்வுலகத்தின் கெதாகெதி தெரியாததல்ல. தம்மைத் திருப்பி யழைத்துச் சென்று பிரஜைகளைச் செழிப்புறச் செய்யவேண்டு மென்கிற கிரமமான அபிலாஷையினாற்றான் இவரும் இம்மாதிரி நாஸ்திக வாதத்தை ஏறிட்டுக்கொண்டு பேசுவாரானார்.”

ஜாபாலிரபி ஜாநீதே லோகஸ்யாஸ்ய கதாகதிம் ।
நிவர்த்தயிதுகாமஸ்து த்வாமேதத் வாக்யமுக்தவாந் ॥

இந்த ஜாபாலி விருத்தாந்தத்தில் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகிற சரீரத்தையன்றி ஆத்மா வென்கிற வேறு தத்துவமொன்றில்லை என்கிற தேஹாத்மவாதமானது கையாளப்படலாயிற்று. இது நாஸ்திக்கியத்தின் ஒரு முக்கியமான அம்சம். நிற்க இதற்கும் மேலாக ஈசுவரனொருவனில்லை யென்கிற நிரீச்வரவாத மொன்றுண்டு. அதையுஞ் சில ஸந்தர்ப்பத்தில் கார்யார்த்தமாகவே கையாளுவதுண்டு. அதற்கு ஒரு உதாஹரணத்தைக் காட்டுகின்றோம்.

ஸ்ரீ இராமபத்திரன் காட்டிற்குப் புறப்படுகிறார். அவரைப் பெற்ற கௌஸல்யாதேவி அத்துக்கத்தைப் பொருக்க மாட்டாதவராய் மனம் பதைக்க உடல் நடுங்கத் துடிக்கின்றார். அத் துயரத்தைக் கண்ணுற்றார் இளையபெருமாள். அதனை உடனே களைந்துவிட வேண்டுமென்கிற உறுதி கொண்டார். அவருக்குக் கோபம் பொங்கிற்று. இவ்விடுக்கண் விளைத்தவர் எவரானாலும் அச்சத்துருக்களை இவ்வுலகத்தை விட்டு ஒழித்தே தீருவேனென்று எழும்பிக் குதித்தார். பார்த்தார் ஸ்ரீஇராமபிரான். தனது அருமை ஸஹோதரனை அச்சுத்த வீரனை நெருங்கி இருகரங்களையும் பற்றிக்கொண்டார். அன்னவரின் சினத்தைத் தணிப்பதற்கென்று சில சமன வசனங்களை மொழிகின்றார்.

“இலக்ஷ்மண ! உனக்கு என்மீது ஒப்புயர்வற்ற நேசமுண்டென்பது எனக்குத் தெரியாததன்று. உனது பராக்கிரமத்தையும் பலத்தையும் அணுக முடியாத தேஜஸ்ஸையும் அறியாதவர் இவ்வுலகில் ஒருவருமில்லை. ஆனால் பிரகிருத விஷயத்தில் எனது அபிப்பிராயம் என்னவாயிருக்கிற தென்பதை எண்ணிப் பாராமலே என் செல்வத் தாயையுஞ் சேர்த்துக்கொண்டு நீ எனக்கு வீணான தொந்திரவைத் தருகின்றாய். எனது அன்னை தர்மத்தின் மர்மத்தை நன் கறிந்தவரேயானாலும் எனது பிரிவாற்றாமையினால் இவருக்கு தற்காலம் ஸத்தியத்தின் மேன்மையும் அதன்கண் நமக்குள்ள கடைமையும் விளங்காமற் போயிற்றுப் போலும். தம்பி ! உனக்கு அத்தகைய கிலேசத்திற்கு பிரஸக்தி யில்லையே ? நீ எதற்காக இப்படித் துடிக்கின்றாயோ ? இராஜ்யப் பிரம்சத்தினால் பெரிதான அர்த்தஹானி ஏற்பட்டு அதனால் இராமன் அழிந்து போகின்றானே யென்று நீ துக்கிக்கின்றாயா ? அப்படியானால் தர்மத்தின் மர்மத்தையும் அதன் உன்னதமான லக்ஷியத்தையும் நீ உணர்ந்து கொள்ளவில்லை யென்றே சொல்லவேண்டும். யான் அதைச் சற்று விளக்குகின்றேன். ஆத்திரப் படாமல் உற்றுக்கேளு.

“இலக்ஷ்மண ! தர்மத்தோடொக்க அர்த்த காமங்களும் புருஷார்த்தங்களாகவே மதிக்கப்பட்டிருக்கின்றன வென்றாலும் அவற்றை தர்ம பலங்களாகப் பெறுவதைத் தான் பெரியோர்கள் விரும்புவரே யன்றி அதர்மத்தினால் அடைய நினையார்கள். எனவே தர்மத்திற்கு சற்றேனுங் குந்தகம்

நேரும் போலிருந்தால் அப்போது அவ்வர்த்தகாமங்களை அலக்ஷ்யமாய் தள்ளிவிட்டு தர்மமொன்றையே கைக்கொள்ள வேண்டுமென்றதாயிற்று. ஆகவே, இப்போது நாம் தர்மம் பங்கமுறாத மார்க்கத்திலன்றோ இலக்ஷ்யத்தை வைத்துச் செல்லவேண்டும். அதைவிட்டு அர்த்தகாமங்களை ஒரு பொருட்டாய் நினைத்து நீ பதருகின்றாயே. இது தகுமோ? வேண்டாமப்பா!" என்று சாந்தி ரஸமழையெனத் தகும் மதுரமொழியைப் பொழிந்தார் அக்கருணை முகிலாம் இராமபத்திரன். இதனால் இளையவரின் கோபத்தீ தணிந்ததோ? இல்லை. அது ஆஜ்யாஹுதி பெற்றது போல அதிகமாய் ஜ்வலிக்கலாயிற்று. ஏன்? அவர் அர்த்த ஹானியைப் பொருட் படுத்தா விட்டாலும் அயோக்யமான முறையில் இராஜ்யத்தைக் கவர்ந்து கொள்ளக் கிளம்பியிருக்கின்ற அனுகூல சத்துருக்களைக் களைந்தெறிந்து வைரசாந்தியைச் செய்து கொண்டாலொழிய அவ்வீர புருஷரின் மனது ஆறுதலடைவதாயில்லை. அதனையும் ஆற்றுவதற்கென்று இராமசந்திரன் இவ்வுபாயத்தை அவலம்பித்தார்.

"இலக்ஷ்மண! கைக்கு எட்டியது வாய்க்கெட்டாதபடி யான் காட்டிற்கு ஓடும்படியாக நேர்ந்திருப்பது அன்னை கைகேயினால் தானென்றா எண்ணியிருக்கின்றாய்? அது முழுத்தவறு. என்னைத் துன்புறுத்த என் சிற்றம்மைக்கும் மனம் வருமோ? என்னைப்பெற்ற தாயைவிட யான் அவரை குறைவாகப் பார்ப்பதில்லை. அம்மாளும் தன் பிள்ளை பரதனைவிட என்னை வேறாக எண்ணியதேயில்லை. அத்தகைய பிரேம பரத்தைச் சுமந்து திரியும் எனது அருமை சிற்றம்மையின் திருவாக்கிலிருந்து யான் இராஜ்யத்தை யிழந்து காட்டிற்கு ஓடுவதற்கான உக்கிர சாஸனங்களும் பிறந்தனவென்றால் அதற்கு அமுதத்தையும் விஷமாக்குந் திறன் வாய்ந்த தெய்வத்தைத் தவிர மற்றொன்றை நிமித்தமென்று நினைக்கலாகுமோ? குழந்தாய்! சற்று நிதானமாய் சிந்தித்துப்பார். உத்தம க்ஷத்ரிய புத்ரியான தேவி கைகேயி தன்னிலை தவறாமல் மட்டும் இருப்பாரானால் அவர் தான் தெய்வமென்று போற்றிப் பணிகின்ற தம் பர்த்தாவின் திருமுன்பு உயிரைப்போல் அவர் நேசிக்கின்ற என்னைத் துன்புறுத்தும் பிரார்த்தனையையுஞ் செய்வரோ? அளத்தற்கரிய கபடநிறைந்த அவ்வல்லாளத் தெய்வமன்றோ அந்த நல்லாளையும் அவர் தம் அருமைப் புதல்வனை இப்பேதை திரத்திலும் அல்லாதாளாகச் செய்து விட்டது. ஸௌமித்ரா குமார! இனி நீ அந்த தெய்வத்தையும் எதிர்த்து போர்புரிய நினைப்பாயோ? அப்படியாகில் அது பலியாதுகாண். நல்லதோ தீயதோ அது தந்த பயன்களைக் கொண்டு ஊஹிப்பது மாத்திரமே யன்றி அதனை நேரில் கண்டவர் எவ்வுலகத்திலும் எவருமில்லை. ஆனாலும் உக்கிரமான ஸமாதி நிஷ்டையிலுள்ள மஹர்ஷிகள் கூட அந்த தெய்வத்தின் நிக்ரஹ சக்திக்கு வசப்பட்டு தமது நெடிய நியமங்களை யெல்லாந் துறந்து காமக்குரோதாதி தோஷங்களுக்கு ஆட்பட்டு அவசமாய் அழிந்து போவதை கண்கூடாக் கண்டும் கேட்டு மிருக்கின்றோமே? நாம் கனவிலும் நினைத்திராத ஒரு விரோத நிகழ்ச்சி திடீரென்று தோன்றி நமது யத்தினங்களை யெல்லாம் அழித்து பாழ்படுத்தி கோரிய பய

னைப் பெறவிடாமல் தடுத்துவிடுகிறதே! அது தெய்வத்தின் செயலேயன்றோ? இவ்வுண்மையை யுணர்ந்திருப்பதினால் தான் என்னை எனக்குள் கட்டுப்படுத்திக்கொண்டு இவ்வபிஷேகத்தின் அழிவிலும் யான் ஈஷத்தேனும் பரிதாபப் படாமல் ஸ்வஸ்தனா யிருக்கின்றேன். இதை யுணர்ந்து நீயும் என்போலாக வேண்டுமப்பா! எனவே இலக்ஷ்மண! இந்த காரிய விகாதத்தில் எனது சிற்றம்மையிடம் ஸந்தேஹப் படாதே. தெய்வமன்றோ அவர் வாக்கிற் புகுந்து தகாததையும் பேசவைத்தது? தெய்வத்திற்கு அத்தகைய பிரபாவம் உண்டென்பது உனக்குத் தெரிந்திருக்குமே? ஈதெல்லாம் அந்த பரம் பொருளின் திருவிளையாடல் தம்பீ!" என்று ஆஸ்திக்கியத்திற்கு எல்லை நிலமான நிக்ரஹாநுக்ரஹாதி ஸர்வசக்த்தியுக்த ஈச்வர ஸத்பாவ ஸித்தாந்தத்தில் நிலையாய் நின்றுகொண்டு தம்பிக்கு ஸமாதானங் கூறினாரே; பிறகென்னாயிற்று? அண்ணன் வார்த்தை முடியு முன்னமே அவர் வெருண்டு கிளம்பினார். விற்போன்ற அவரது புருவங்கள் கோபத்தால் நெரிந்து முறிந்து துண்டுபட்டு நெற்றிக்கு மேல் ஏறி நின்றன. புற்றுக்குள் ளிருக்கும் அரவுபோல அவ்வீரன் சீரலானார். நெரிந்த புருவங்களுடன் நிமிர்ந்து பார்ப்பதற்கும் அரிதான அவர் திருமுகம் சினங்கொண்ட சிங்கத்தினுடையது போலாயிற்று. மத்தகெஜம் துதிக்கையை உதறுவது போல இருகைகளையும் உதறினார். இப்படியும் அப்படியுமாக கழுத்தை பலதரமாய்ப் புரட்டித் திருப்பினார். அண்ணனை கடைக்கண்ணால் ஒரு தரம் வக்கிரமாகப் பார்த்துவிட்டு சில வார்த்தைகளைச் சொல்லுகின்றார்.

'"அண்ணா! பித்துப்பிடிக்காத உம்மைப்போன்ற புத்திமான் எவராகிலும் இப்படி தருமமென்றுந் தெய்வமென்றும் தாறுமாறாக உளறுவதுண்டோ? ஆண்மையற்ற அற்ப தெய்வ மெங்கே! வீர்யவத்தரான ஒரு க்ஷத்ரிய புத்திரனெங்கே? பராக்கிரமமற்ற அப்பாதை தெய்வத்தை எதற்காக இப்படி ஏற்றி வைத்துக் கொண்டாடுகின்றீர்? அறிவிற் சிறந்த பெரியோரே! உமது அகண்டிதமான புத்தியையும் துண்டு படுத்திவிட்ட அப்பாழும் மாய தர்மத்தையும் தெய்வத்தையும் யான் இனி தாக்ஷிண்யமின்றி அழித்தாக வேண்டும். அழித்தே தீருவேன். நல்லது அண்ணா! உமக்கு தர்மத்தைக் காப்பது கடமையானால் ஸர்வலோக வித்விஷ்டமாய் பரம அதர்மமுமான பரதாபிஷேகத்தை நீர் அங்கீகரிப்ப தெப்படி? காம பரதந்திரனான உமது பிதா ஆசித்தாலும் அவ்வதர்மத்திற்கு இணங்கி நீர் அதை பூர்த்தி செய்து வைக்கலாகுமோ? ஆனால் அவர் செய்வதல்ல; தெய்வஞ் செய்கின்றது என்று இதற்கு நீர் அசட்டுத் தனமான ஒரு ஸமாதானத்தை எண்ணலாம். அதனால் அவ்வக்கிரமத்தையும் உபேக்ஷிக்கலாம். அப்பாதகத்திற்கு, உதவியும் புரியலாம். ஆனாலும் அக்கோழைத்தனத்தை யான் ஒரு போதும் குணமென்று ஒப்புக் கொள்ளமுடியாது. பராக்கிரம மற்ற பேடியன்றோ தெய்வந் தெய்வமென்று புலத்திக்கொண்டு திரிவான். ஸ்வயமதிப்புள்ள வீரர் எவரும் அத்தெய்வத்தை திரும்பியும் பார்க்கமாட்டார்கள். தமது புருஷசக்தியினால் தெய்வத்தை அடக்கியாளத் திறனுள்ள தீரபுருஷர்களுக்கு தெய்வம் கெடுத்து விட்ட

தென்று துக்கிக்கவே இடமிராது. அவ்வீரர்களுடைய ஆரம்ப மொன்றிலும் அத் தெய்வம் அஞ்சாமல் தலையிடாது. தவறிக் குறுக்கிட்டால் அவ் வீரத்திற்கு அதன் தலை பலியாகவேண்டியது தான். இவ் வுண்மையைப் பற்றி எவருக்காயினும் சற்றேனும்ஸம்சய முண்டானால் இதோ யானே அதை விளக்கி விடுகின்றேன். தெய்வத்தின் யோக்கியதை எங்கே, பௌருஷத்தின் பிர பாவம் எங்கே, என்று தெய்வ பௌருஷங்களுக்குள்ள தாரதம்யம் இன்று வெட்ட வெளியாகப் போகின்றது. பிரபுவே தமது ராஜ்யாபிஷேகத்திற்கு இடையூறாகத் தோன்றிய அத்துர் தெய்வமானது எனது பௌருஷத்தால் தலை யிழந்து உடல் சிதைந்து சிதறிக்கிடப்பதை ஊரிலுள்ள ஜனங்கள் அனைவருங் கண்டு களிக்கப்போகின்றனர். ஒரு கால் அது சாகாவரன் பெற்ற சாசுவதமே யானாலும் மதம் பிடித்துத் திரிகின்ற மத்தகெஜத்தை ஸமர்த்தனை மாவுத்தன் போல பௌருஷமெனும் அங்குசத்தால் மஸ்தகத்தில் அடித்துத் திருப்பி என் வழிக்கு இழுத்துச் செல்வேனே யன்றி அதன்படி செல்ல அதற்கு அணுவள வும் இடங்கொடேன். நாதா !

𑌅𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑌂𑌭𑍍𑌰𑌮𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌾𑌤𑍋 𑌵𑍈 𑌸𑍁𑌮𑌹𑌾𑌨𑌯𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌦𑍋𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯𑌾𑌨𑌤𑌿𑌶𑌙𑍍𑌕𑌯𑌾 ॥
𑌲𑍋𑌕𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑌾𑌰𑌬𑍍𑌧𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌚𑌨𑌮𑍍 ।
𑌨𑍋𑌤𑍍𑌸𑌹𑍇 𑌸𑌹𑌿𑌤𑍁𑌂 𑌵𑍀𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌮𑍇 𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥
𑌯𑍇𑌨𑍈𑌵𑌮𑌾𑌗𑌤𑌾 𑌦𑍍𑌵𑍈𑌧𑌂 𑌤𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌹𑍀𑌪𑌤𑍇 ।
𑌸 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌮𑌮 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑍁𑌹𑍍𑌯𑌸𑌿 ॥
𑌕𑌥𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌶𑌕𑍍𑌤𑌃 𑌕𑍈𑌕𑍇𑌯𑍀𑌵𑌶𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃 ।
𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌧𑌰𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑌂 𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌮𑍍 ॥
𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍇 𑌦𑍈𑌵𑍀 𑌚𑌾𑌪𑌿 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌤𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌂 𑌤𑍇 𑌨 𑌮𑍇 𑌤𑌦𑌪𑌿 𑌰𑍋𑌚𑌤𑍇 ॥
𑌵𑌿𑌕𑍍𑌲𑌵𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑌹𑍀𑌨𑍋 𑌯𑌃 𑌸 𑌦𑍈𑌵𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌵𑍀𑌰𑌾𑌃 𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌨 𑌦𑍈𑌵𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌦𑍈𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌾𑌰𑍇𑌣 𑌯𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌬𑌾𑌧𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌨 𑌦𑍈𑌵𑍇𑌨 𑌵𑌿𑌪𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍋𑌽𑌵𑌸𑍀𑌦𑌤𑌿 ।
𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍍𑌯 𑌦𑍈𑌵𑌸𑍍𑌯 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌚 ।
𑌦𑍈𑌵𑌮𑌾𑌨𑍁𑌷𑌯𑍋𑌰𑌦𑍍𑌯 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥
𑌅𑌦𑍍𑌯 𑌮𑌤𑍍𑌪𑍌𑌰𑍁𑌷𑌹𑌤𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑍈 𑌜𑌨𑌾𑌃 ।
𑌯𑍈𑌰𑍍𑌦𑍈𑌵𑌾𑌦𑌾𑌹𑌤𑌂 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌚𑌨𑌮𑍍 ॥
𑌅𑌤𑍍𑌯𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌦𑌾𑌮𑌂 𑌗𑌜𑌂 𑌮𑌦𑌬𑌲𑍋𑌦𑍍𑌧𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌵𑌿𑌤𑌮𑌹𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌪𑍌𑌰𑍁𑌷𑍇𑌣 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑍇 ॥

இந்த இலக்ஷ்மண ஸம்வாதப் பிரகரணத்தில் நாஸ்திக்கியத்தின் முக்கி யாம்சமான நிரீச்வர ஸித்தாந்த வாதம் நன்றாக ஸமர்த்திக்கப் பட்டிருப்பது விசதம். ஆனால் பரம பாகவதோத்தமரான சேஷாவதார ரென்று உத்பிரே க்ஷிக்கப்படுகின்ற இலக்ஷ்மணனை எவரும் நாஸ்திகரென்று நினைக்க வேமாட்டார். ஆதலால் இளையபெருமாளும் பெருமாளுடைய அர்த்தகாமங் களின் ஸம்ரக்ஷணார்த்தமாகவே நிரீச்வர வாதத்தையும் ஆரோபித்துக் கொண் டாரென்க. எனவே, நாஸ்திகமென்பது ஸர்வ ஸமயிகளாலும் பிராப்த காலத் தில் ஏற்றுக்கொள்ள வேண்டியதொரு ஸாமயிக தர்சனமே யாதலால் சார் வாகரென்று ஒரு ஸந்ததியாரில்லாதிருப்பது ஸர்வதா ஸங்கதமே.

இது நிற்க, மற்றுமொரு விசேஷப்பிரச்னம் இந்த சார்வாக தர்சனத் தைக்குறித்துக் கேழ்கப் படுகின்றது. அதென்னவெனில் ? ஒவ்வொரு ஸித் தாந்தத்திற்கும் அததன் கொள்கையை ஸ்தாபிப்பதற் கென்று பற்பல நூல் கள் நிர்மிக்கப்பட்டிருக்கின்றனவே ? லோகாயத மென்று பெயர் பெற்று அதி விஸ்தாரமாய் விளங்குகின்ற இந்த ஸித்தாந்தத்திற்கென்று ஸொந்தமான ஸ்தா பன க்ரந்தங்கள் எத்தனை யிருக்கின்றன ? ஏதோ ஸூத்திரம், விருத்தி என்று இரண்டொன்று இருக்கின்றதாகச் சொல்லுகின்றார்கள். அது கூட உருப்படியாக எதுவும் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லையே ? இதன் மர்ம மென்ன ?

சார்வாக ரென்பவர் யாவர், என்று முன்கேட்ட கேள்விக்கு அப்படி ஒருவருமே யில்லை, அல்லது எல்லோருமே சார்வாகர் தான் என்று இரு வகை யாகவும் பதில் கிடைத்தது போல, சார்வாக ஸமய நூல்களெவை, எத்தனை, என்கிற இந்த வினவிற்கும் இருவகையாகவே விடை கொடுக் கலாம். எப்படி யெனில், தர்சனஸ்தாபகர்களான ஆசிரியர்கள் தமது ஸித்தாந்தக் கொள்கையை பிறர் ஆக்ஷேபிக்கும்போது தான் அவ்வாக்ஷேபத் தைப் பரிஹரித்து தக்க ஸமாதானத்தைச் செய்து வைப்பதற்காக நிபந்தனங் களை நிர்மிக்கின்றனர். ஆக்ஷேபமே யில்லாவிட்டால் சீரான உபதேசமின்றி விரிவான ஸ்தாபக கிரந்தங்கள் வேண்டியிராதன்றோ? ஏனைய தர்சன ங்களிலும் ஒருவர் சொல்லுகிற தத்வத்தை பெரும்பாலும் மற்றவரெல்லாரும் மறுக்கின்றன ரென்பது ஸாதாரணமாய் காணக்கிடக்கின்றது. இருக்க இச் சார்வாகர் சொல்லுகின்ற உண்மையை உண்மையாகவே மறுக்கின்றவர் ஒருவருமில்லை. உதாஹரணமாக பிரமாண விஷயத்தில் இவர்கள் பிரத்தியக்ஷ மொன்றையே பிரமாண மென்கின்றார்கள். மற்றுஞ்சிலர் ஆகமாதிகளையும் கூட்டிக்கொள்ள வேண்டுமென்று மன்றாடு கின்றனரே யன்றி இவர் காட்டிய பிரத்தியக்ஷப் பிரமாணத்தை ஆக்ஷேபிப்பார் எவருமில்லை. இப்படியே பிரமேய விஷயத்திலும் இவர்கள் அர்த்த காமங்களையே புருஷார்த்தங்களென் கின்றனர். மற்றைய சமயிகள் இன்னும் ஒன்றிரண்டும் உண்டென்கிறார் களேயன்றி இவ்விரண்டுள் ஒன்றைக்கூட இல்லை யென்பதில்லை. இனித் தாம் கூறுவதைத் தடையின்றி மற்றவரும் ஏற்றுக்கொண்டு விடுகின்றமையால்

அதனை ஸாதிக்கவென்று விரிவாக கிரந்தங்களை வரைவது இவர்களுக்கு அவச்யமில்லாததாயிற்று. அதிகமுண்டென்று வாதிப்பவரும் தாம் சொல்லுவதைப் பிறருக்கு நேரில் தாராளமாய்க் காட்டி ஸாதிக்க முடியாத நிலைமையிலிருப்பதால் அதைத் தடுப்பதற்கும் அதிகப் பிரயத்தனம் வேண்டியதில்லையன்றோ? எனவே இந்த மதத்திற்கு எதற்காக அதிக கிரந்தங்கள் என்று கேட்க வேண்டுமே தவிர மாற்றிக் கேழ்பதற்கு நியாயமொன்றுமில்லை. ஆதலால் சார்வாக தர்சனத்திற்கு நிபந்தனங்கள் குறைவுதானென்று ஒருவகையாக உத்தரஞ் சொல்லலாம். நிற்க, உலகத்திலுள்ள நூல்களில் நூற்றிற்கு தொண்ணூற்று ஒன்பது லோகாயத நூல்களேயாதலின் இம்மதத்தைப்போன்ற கிரந்த விஸ்தாரமுள்ளது வேறெந்த மதமுமில்லை என்று மற்றொரு வகையாகவும் விடை கொடுக்கலாம். அதெப்படியெனில்?

உலகத்தில் காணக்கிடைக்கின்ற கிரந்தங்கள் பொதுவாக இருவகையாயிருக்கின்றன. பிரத்தியக்ஷ காம்யங்களான பௌதிக ஸுகங்களைக்காட்டி அவற்றை ஸாதித்துக்கொள்வதற்கான நல்வழியை விளக்கி வைக்கின்ற லௌகிக நூல்கள் அவற்றுள் ஒருவகை. பிரத்யக்ஷானுமானங்களுக்கு எட்டாத அத்யந்த அதீந்திரியமான ஆத்மானந்த லாபத்தையும் அதற்கு ஸாதனமான ஸன்மார்கத்தையும் உபதேசிக்கின்ற ஸமய நூல்கள் மற்றொரு வகை. இவ்விரண்டிற்குள் முன்னதின் வர்கமே வெகுவிஸ்தாரமாக நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. பின்னதோ வெனில் என்றைக்கோ ஒன்றிரண்டு அபூர்மாய்த் தோன்றி அதன் உண்மை இன்றுவரை யாவரும் ஒப்புக்கொள்ளுமாறு ருஜூப்பிக்கப்படாமல் கிடப்பதால் மென்மேல் அபிவிருத்தியடைய அவகாசமில்லாமல் அன்றைக்கு சொல்லியதைப் பற்றியே இன்றைக்கும் சர்ச்சை செய்துகொண்டு உழலும்படி குன்றிப்போயிருக்கின்றது. இன்னும் சற்று விவரமாய்க்கூற வெண்டுமானால் இந்திரியவாயிலாக அனுபவிக்கக்கூடிய பௌதிகஸுகங்களை அபிவிருத்தி செய்து கொடுக்கும் முறையில் வரையப்பட்டவைகளான ஆயுஷ்கம், தானுஷ்கம், காந்தர்வம், தந்திரம் எனப்படுகின்ற உபவேதங்களும், அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், அலங்காரசாஸ்திரம், இத்யாதிகளான வித்யாபேதங்களும் இன்னும் இவைபோன்றவைகளும் முதல்வகுப்பில் சேர்ந்தவைகளாம். இவற்றுள் வியாதிமூலத்தைத் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்த ஔஷதத்தைக் கண்டு பிடித்து பிரயோகித்து ஆயுள் ஆரோக்கியாதிகளை வளர்ப்பதற்கு வழி காட்டுவது ஆயுர்வேதம். யுத்தத்தில் ஜெயம்பெறுவதற்கு வேண்டிய அஸ்திரசஸ்திராதிகள், வ்யூஹ ரசனை, முதலியவற்றை விளக்கிக்காட்டுவது தனுர்வேதம். பரிசுத்தமான குயில்போன்ற இனிய கண்டத்திலும் அதனை அநுசரிக்கின்ற வீணைமுதலான வாத்தியங்களிலும் உண்டாகின்ற ஸரிகமாதி ஸ்வர பேதங்களின் கிரமங்களாலும் தாளகவி சேஷங்களின் ஸம்மேளனத்தினாலும் கான கலையை மேன்மைப்படுத்துவது காந்தர்வம். ஸோபனம் ஹாரங்களான பிரயோக மந்திரங்களின் உபாஸனை மார்க்கத்தை விசதீகரிப்பது

தந்திரசாஸ்திரம். பிரபலப்பிரமாணவிரோதமில்லாத வகையில் இராஜவ்ருத்தங்களையும் அர்த்தஸம்பாதன யுக்திகளையும் சாஸனஞ்செய்து வைப்பது அர்த்தசாஸ்திரம். ஜன்மகிருதமாயும் குணகிருதமாயுமுள்ள பத்மினீ, சசக, வசீய, அனுகூலாதி ஜாதிபேதங்களை அடைந்திருக்கின்ற ஸ்திரீபுருஷர்களுடைய ஸத்வ லக்ஷணமான அனுராகக் குறிப்பை விவரித்துக் காட்டுவது காம சாஸ்திரம். இராஜபவனங்கள், தேவாலயங்கள், பிரதிமைகள், உத்யானங்கள், கிருஹங்கள், வாபீ கூப தடாகாதிகள், இத்யாதிகளின் நிர்மாணாதிகளில் நைபுண்யத்தைத் தருவது சிற்ப சாஸ்திரம். உபமை, அனன்வயம், உத்பிரேக்ஷை, ரூபகம், முதலான அலங்கார வர்ணனங்களினால் சித்த ரஞ்ஜனத்தை செய்து வைப்பது அலங்கார சாஸ்திரம். இவைகள் யாவற்றும் பௌதிகமான ஐந்திரிய ஸுகத்தையே அபிவிருத்தி செய்துகொள்ள வழிகாட்டுகின்றனவென்பது வெட்ட வெளியன்றோ? இது மட்டுமல்ல. திமிநக்ராதிகளைப் போல நீருக்குள் மூழ்கிச் செல்லுவதற்கும் ஸுபர்ண கெந்தர்வாதிகளைப் போல ஆகாசத்தில் ஸ்வச்சந்தமாய் ஸஞ்சரிப்பதற்கும் ஸாதகங்களான பற்பல அரிய யந்திரங்களைக் கண்டு பிடித்துக் காட்டுகின்ற நூதன நூல்கள் பலவும் இப்பௌதிக ஸுகாபிவிருத்திக்கு ஆனவைதான். ஆகவே இவையெல்லாம் சார்வாக தர்சனத்தைச் சார்ந்தவைகளே யென்பதற்கு ஸந்தேஹமில்லை. இவற்றை நிர்மிப்பவர்கள் எக்காலத்தில் எத்தீவில் உதித்தவரேயானாலும் அர்த்தகாமங்களின் அபிவிருத்தியில் முழு நோக்கமுள்ளவரே யன்றி விமானத்தில் பரந்து சென்று பிரும்ஹ பதவியைப் பெறுவோமென்று சற்றுஞ் சிந்தித்தவரன்று. ஆகவே இன்றைக்கும் நாளைக்கும் புதிது புதிதாகத் தோன்றுகிற அவ்வித சாஸ்திரங்கள் யாவும் சார்வாக அபிப்பிராயத்தையே தழுவி எழுகின்றனவாதலால் அவற்றை அவர்களுடையதே யன்றி தம்மதென்று சொல்லிக் கொள்ள எச்சமயத்தினருக்கும் பாத்தியமே யில்லை.

எனவே, நாம் கீழ்க்காட்டிய இருவகை கிரந்தங்களுள் இத்துணை விசாலமாக விருத்தி யடைந்திருக்கின்ற முதல் வகுப்பிற் சேர்ந்த கோடிக்கணக்கான இவைகள் நிற்க, அத்யாத்ம லாபத்தைப் பிரதிபாதிக்கின்ற இரண்டாம் வகுப்பிற் சேர்ந்ததென்று கெணிக்கக் கூடிய கிரந்தங்களோ வெனில், உபநிஷத், ஸூத்திரம், பாஷ்யம் போன்ற இரண்டு மூன்றேதானிருக்கின்றனவாதலின் அவற்றின் எண்கள் நமது ஒரு கை விரல்களுக்கே பற்றாத தாயிருக்கின்றன. உலக முழுதும் பரவிக்கிடக்கின்ற காவிய அலங்கார அர்த்த காம சிற்ப இராஜ்ய தந்திராதி சாஸ்திர ஸமூஹங்களெங்கே? எங்கேயோ ஒரு மூலையில் ஒடுங்கிக்கிடக்கின்ற அத்யாத்ம விசாரணை சாஸ்திரமெங்கே? அம்மலையில் இது ஒரு அணு. அக்கடலில் இது ஒரு துளி. ஆதலால் உலகத்திலுள்ள நூல்கள் பெரும்பாலும் சார்வாக ஸமய நூல்களே தானென்று தாராளமாகச் சொல்லலாகும். ஆகையால் தான் பிரதான உபகரண பாவப்பிரதிபாதன புரஸ்ஸரமாக வித்யா விசேஷங்களை விபஜித்துக் காட்ட நினைத்தவர்களான நீதி நிபுணர்கள் அர்த்த காம சிற்ப அலங்கார தேச பாஷாதி சாஸ்திர

வர்கங்களை நாஸ்திக மதத்தின் தலைமையின் கீழ்வைத்துப் பிரித்துக் காட்டி யிருக்கின்றனர்.

ஆகவே, சார்வாக ரெனப்படுவோர் யாவர் என்கிற கேள்விக்கு அப்படி ஒருவருமில்லை. அல்லது எல்லோருமே சார்வாகர் தானென்று இருவகையாக வும் பதில் சொல்லலாவது போல, சார்வாக கிரந்தங்கள் எத்தனை என்கிற கேள்விக்கும் அது ஒன்றும் அதிகமில்லை அல்லது உலகத்திலுள்ள நூல்கள் பெரும்பாலும் சார்வாக ஸமய நிபந்தனங்களே தானென்று இருவகையாகவே விடைகொடுக்கலாம் என்றது முற்றிலும் உசிதமாகும்.

பிரஸக்தானு ப்ரஸக்தமான இவ்விஷயத்தை இம்மட்டில் நிறுத்திக் கொண்டு இனி பிரகிருதத்தை விசாரிப்போமாக.

(இன்னும் வரும்)

மஹா கவி ஹ்ருதய காம்பீர்யம்.

[திருச்சி, ஸ்ரீ உ. ப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.]

எங்கும் புகழ்பெற்று எக்காலத்திலும் குன்றாத ஸௌந்தர்யத்துடன் பிரகாசித்துவருகின்றதும், கீர்வாணவாணி என்றும், அமர பாஷை என்றும் வழங்கப்பட்டு வருகிறதுமான ஸம்ஸ்க்ருத பாஷையில் வரகவிகளென்றும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களென்றும் பிரசம்ஸிக்கப் படுகிற கவிகளுக்குள் வால்மீகிக்கு அடுத்த படியில் சொல்லக்கூடிய மஹா கவி காளிதாஸன் ஒருவரேயாம். இவர் விக்கிரமாதித்ய மகா ராஜனுடைய ஸபையில் இருந்த ஒன்பது பண்டித ரத்னங்களுள் ஒரு அனர்க்க ரத்னம். 1987 வருஷங்களுக்கு முன் இருந்தவர். விக்கிரம சகமே இந்த விஷயத்தில் ப்ரமாணம். தவிரவும், धन्वन्तरिक्षपणकामरसिंह शङ्कुवेताल भट्टघटकर्पर कालिदासाः । ख्यातो वराहमिहिरो नृपतेस्सभायां रत्नानि वै वररुचिर्नव विक्रमस्य ॥ என்கிற उक्त ச்லோகமும் ப்ரமாணம். இவர் பண்ணின கிரந்தங்கள் எட்டு. அவைகளாவன:—ரகுவம்சம், மேகஸந்தேசம், குமார ஸம்பவம், மாளவிகாக்னிமித்ரீயம், விக்ரமோர்வசீயம், சாகுந்தலம் ஜ்யோதிர் விதாபரணம், குண்டல மகாபாஷ்யம். இவருக்குப் பிறகு இவர் பெயருள்ள கவிகள் பலர் உண்டு. அவர்களாவன, பரிமள காளிதாஸன், அபிநவ காளிதாஸன், ஸாஹஸாங்க காளிதாஸன், ஸரஸ காளிதாஸன் என்று இந்த காளிதாஸர்கள் இயற்றிய क्षुद्र ப்ரபந்தங்களை அறியாமையால் நாம மாத்திரத்தினால் மயங்கி மஹா கவியாகிய ஆதி காளிதாஸன் செய்ததாக சிலர் சொல்வார்கள். அவைகள் காளிதாஸருடைய வைதுஷ்யத்திற்கும் ஞானத்திற்கும் கௌரவத்திற்கும் ஒருக்காலும் ஏற்காதவை. விமர்சகர்கள் ஹ்ருதயந்தான் இதற்கு ஸாக்ஷ்யம். காளிதாஸன் கவிகுலதிலகன் என்

பதில் ஒருவருக்காவது विप्रतिपत्ति இராது. அப்படிப்பட்ட மஹா கவியினால் இயற்றப்பட்ட காவ்யங்களுக்குள் மிகச் சிறப்பு வாய்ந்தது ரகு வம்சமென்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஏனெனில் காவ்யங்களுக்கு உரிய லக்ஷணங்களுக்கு இணக்கமாக ஸர்க்க பந்தமோ ப்ரதிபாத்ய விஷயமோ நகரம் முதலியவைகளின் வர்ணனமோ ரஸவந்தரமான அலங்கார நிரூபணமோ அனைத்தும் இந்தக் காவ்யத்தில் அழகாக அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த காவ்யத்தில் वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये । जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥ என்று மங்கள சுலோகம் மஹா கவியினால் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சுலோகமானது திவ்ய தம்பதிகளின் விஷயமான ப்ரணாமத்தை கவி செய்திருப்பதாகக் காட்டுகிறது. இதில் என்ன விசேஷங்களிருக்கின்றன வென்பதை ஊன்றிப் பார்ப்போம். மஹா கவி இந்த மங்கள ச்லோக ப்ரணயனத்தினால் ச்ரேயஸ்ஸில் விருப்பங் கொண்டு மங்கள கார்யங்களைச் செய்யத் தொடங்குகிறவர்கள் இஷ்டதேவதையை தவறாமல் வணங்கவேண்டு மென்பதை உலகத்தாருக்கு அறிவித்தார். தெய்வமில்லை, பரலோகமில்லை என்று நாஸ்திக வாதம் செய்பவர்களின் கொள்கைகளை தான் செய்த மங்களாசரணத்தினால் மறுத்தார். அம்ருத பீஜமாக இருக்கிற வகாரத்தை தொடக்கத்தில் ப்ரயோகித்து தேவதானுக்ரஹத்தினால் அம்ருதம் போன்ற வாக்கையும் அதிஸுந்தரமான அர்த்தத்தையும் தான் பெற்றிருப்பதையும் ஸூசிப்பித்தார். கர்மேந்திரியங்களுக்குள் சப்தப்ரயோகத்திற்கு ஸாதனமாக இருப்பதான வாகிந்திரியம் ஒன்றே சிறப்புடையது. வாகிந்திரிய ஜன்யமாயும் அஜ்ஞாநாந்தகார நிவர்த்தகமாகவுமிருக்கிற சப்தப்ரயோக மென்கிற ஸூர்யோதய மில்லாவிடில் உலகமனைத்தும் காடாந்தகாரம் போன்ற அஜ்ஞானத்தினால் கவரப்பட்டு ஞாந ஒளியை இழந்ததாக ஆகுமென்பதையும் தெரிவித்தார். அர்த்தாபிலாஷக சப்த ப்ரயோகத்திற்கு இன்றியமையாத ஸாதனமாக இருப்பதால் அர்த்தத்தைக் காட்டிலும் வாக்கு மேன்மையுள்ளது. அதனால் ‘अल्पाच्तरम्’ என்கிற பாணினி மஹர்ஷியின் ஸூத்ரத்தின்படி. த்வந்த்வஸமாஸத்தில் வாக் சப்தத்திற்கு பூர்வ நிபாதமும் அர்த்த சப்தத்திற்கு பரநிபாதமும் வந்திருக்கிறது என்பதையும் ப்ரயோகத்தால் காட்டினார். மேலும் வாக்கானது அரும் பொருளுள்ள சப்தங்களை உண்டு பண்ணுகிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பது பற்றி அதில் மாத்ரு ஸமாதியைச் செய்து தைத்தரீய உபநிஷத்தில் சொல்லப் பட்டிருக்கிற ‘मातृदेवो भव’ ‘माता पूर्वरूपम्’ என்கிற வசனங்களின்படி தாயானவள் முதலில் பூஜிக்கத் தக்கவளாக இருப்பதால் தொடக்கத்தில் தனக்கு உத்தேச்யமான சப்தங்களுக்கு ஜனனியாக இருக்கிற வாக்கைத் துதித்தார். தவிரவும். ‘इवेन समासो विभक्त्यलोपश्च’ என்கிற வார்த்திகத்தின்படி உப சப்தாந்தமான ஸமாஸத்தையும் விபக்தி லோபமில்லாமல் காட்டி சப்த சாஸ்திரத்திலுள்ள அபூர்வமான ஸமாஸ ரஹஸ்யத்தையும் வெளியிட்டார். மேலும் எது ப்ராப்யமோ அது தான் உபாஸிக்கத் தக்கதென்பது வேதாந்திகளின் ஸம்ப்ரதாயம். அந்த

ஸம்ப்ரதாயப்படி இந்த மஹாகவிக்கு வாக் அர்த்தம் இரண்டும் ப்ராப்யமாதலால் பார்வதீ பரமசிவன் இருவர்களிடத்திலும் வாகர்த்த த்ருஷ்டியை வைத்து உபாஸ்தி செய்ததை துலக்கிக்காட்டினர். தத்க்ரது நியாயத்தின்படி உபாஸனம் எப்படியோ அப்படியே பலப்ராப்தி என்பது வெளியிடப்பட்டது. தொடக்கத்தில் ஸ்ரீப்ரதமான மகண விந்யாஸத்தினுல் படிக்கிறவர்களுக்கு ஸ்ரீவிலாஸமும் அதனடியாக உண்டாகும் எல்லா ஸுகங்களும் உண்டாகக் கடவதென்று தேவதா ப்ரார்த்தனை செய்திருக்கிறார். இந்த மகணத்திற்கு பூமி தேவதை. ‘ஸோமஸூர்யோ ஸதநோதி ஸாந்த்ரஸா:’. என்று இந்த சாஸ்திரத்தில் சொல்லிய வண்ணம் இந்த கணத்திற்கு பூமிதேவதையாதலால் ஸர்வபூதப்ரக்ருதியாக இருக்கிற பூமி தேவியையும் வித்வஜ்ஜனங்களின் ஸம்ருத்தியின் பொருட்டு மஹாகவி வேண்டி இருக்கிறார். காயத்ரீ மந்திரத்தை ப்ரதிபாதிக்கிற அனுஷ்டுப் சந்தஸ்ஸை பரிக்ரஹித்து இந்த மங்கள ச்லோகத்தை செய்து இந்த ச்லோகத்தில் காயத்ரீ ஸமாதியை கவி வைத்திருப்பதால் க்ரந்த கரணத்திற்கு இடையூறாக இருக்கிற அஜ்ஞானம் அன்யதாஜ்ஞானம் விபரீதஜ்ஞானம் இவைகள் முற்றிலுமொழிந்து காவ்ய கரணத்திற்கு அஸாதாரண காரணமாக இருக்கிற ப்ரதிபையின் ஆவிர்ப்பாவத்தை வேதமாதாவான காயத்ரீ தேவியினிடம் பிரார்த்திருக்கிறேன் என்பதையும் ஸூசிப்பித்தார். அந்த தேவதைக்கு காயத்ரீ என்கிற பெயரானது ‘காயந்தம் த்ராயதே’ என்கிற வ்யுத்பத்தியினால் எவன் தன்னை ஸுஸ்வரத்தோடு ஆனுபூர்வியுடன் உச்சரித்து மனதில் அநுஸந்திப்பனோ அவனைக் காப்பாற்றுகிறவள் என்கிற அவயவ வார்த்தத்துடன் கூடின காரண இடுகுறிப் பெயர். ஆகையால் காவ்ய மார்க்கத்தில் இழிந்திருக்கிற எல்லோருக்கும் ஆலஸ்யத்தினின்றும் அவிவேகத்தினின்றும் ப்ரமத்தினின்றும் அகீர்த்தியினின்றும் ரக்ஷணத்தை காயத்ரீயிடமிருந்து மஹா கவி வேண்டியிருக்கிறார். அபுநராவ்ருத்திரூபமான மோக்ஷ சுகப்ராப்தியில் விருப்பமுள்ளவன் காவ்யத்தில் ப்ரவ்ருத்தி உள்ளவனாக ஆகான். காவ்யம் யசஸே அர்த்தக்ருதே வ்யவஹாரவிதே சிவேதரக்ஷதயே । ஸத்ய: பரநிர்வ்ருதயே காந்தா ஸம்மிததயோபதேசயுஜே ॥ என்கிற காவியபல ச்ருதியை வெளியிடுகிற சுலோகத்தில் மோக்ஷத்தை ஒரு பலமாக எடுத்துக் கூறவில்லை. உபமானோபமேயங்களாக முறையே வாக்கையும் பார்வதியையும் எடுத்திருப்பதால் வாக்குக்கு உத்கர்ஷம் ஏற்படுகிறது. இதனால் வேத சாஸ்திரத்தைப் போல் ஆஜ்ஞையிடாமலும் புராணங்களைப் போல் நேசத்தை முன்னிட்டு கர்த்தவ்ய விஷயங்களைத் தெரிவிக்காமலும் “காந்தா ஸம்மித தயோபதேசயுஜே” என்கிற வசனத்தின்படி பிராண நாயகிபோல் ரஸிகர்களாக இருக்கிற, எல்லோருடைய உள்ளத்தையும் உருகும்படி செய்து கர்தவ்யாகர்த்தவ்யங்களில் முறையே கௌதுகத்தையும் ஜிஹாஸையையும் உண்டு பண்ணுகிற ஸ்வபாவமுள்ளது காவிய வாக்கு என்பதையும் வ்யங்க்ய மர்யாதையாகக் காட்டி இருக்கிறார். ‘பத்ரீ’ ஸம்ப்ருக்தௌ!’ என்று தாது பாடத்தில் பீமஸேநாசார்யர் அர்த்தம் கூறி இருப்பதால் ‘ஸம்ப்ருக்தௌ’ என்று சொன்னாலே இணை பிரியாதிருப்பர்வ

[stamp]

[illegible] அர்த்தம் ஏற்படுவதாக இருக்க மீண்டும் ஸம் என்கிற உபஸர்க்கத்தைச் சேர்ந்து ஸம்ப்ருக்தௌ என்று சொல்லி இருப்பதால் சேர்க்கையில் தார்ட்யம் கூறப்பட்டது. இதனால் திவ்ய தம்பதிகள் எவ்வண்ணமாக எக்காலத்திலும் இணை பிரியாதவர்களாக இருக்கிறார்களோ அவ்வண்ணமாகவே தனக்கு அவர்களுடைய ப்ரஸாதத்தால் ஸித்திக்கும் வாகர்த்தங்கள் இரண்டும் ஒருக்காலும் ஒன்றைவிட்டு ஒன்று அகலாமல் தன்னிடம் ஸாஹித்யம் செய்துகொண்டு விவக்ஷிதங்களான க்ரந்த காணத்தில் உதவி புரியவேண்டுமென்கிற கோரிக்கையும் வெளியிடப்பட்டது. இதனால் நிரர்த்தக சப்தாடம்பரங்களால் கிரந்தங்களை நிரப்புகிற குகவிகளைப் போலன்றி கிரந்தங்களில் அர்த்த புஷ்டியுள்ள ரமணீய சப்தங்களை ஸரளமான சைலியினால் அமைக்கிற ரஸிக கவி கோஷ்டீப்ரவேசம் தனக்கு தேவதானுக்ரஹத்தினால் உண்டாக வேண்டும் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. பார்வதீ பரமேச்வரௌ என்கிற த்வந்த்வ ஸமாஸத்தில் பார்வதியை அபேக்ஷித்து பரமேசுவரனுக்கு உத்கர்ஷமிருந்த போதிலுங்கூட ‘அப்யர்ஹிதம்’ என்கிற ஸூத்திரத்தினால் பரமேச்வர சப்தத்திற்கு பூர்வநிபாதம் வரவில்லை. ஏனென்றால் அந்த ஸூத்திரத்தைக் காட்டிலும் ‘அல்பாச்தரம்’ என்கிற ஸூத்ரம் பரஸூத்ரம். இந்த ஸூத்திரத்தின் அர்த்தமாவது அல்ப: அல்பஸம்க்ய: அச் யஸ்மின் தத் அல்பாச், தச்ச அல்பாச்தரம் ச தத் ஏவ நிபாதநாத் த்வந்த்வே பூர்வம் ஸ்யாத் । அல்பஸம்க்யாகாஜ்கம் பதம் த்வந்த்வ ஸமாஸத்தில் முந்திப்ரயோகிக்கத்தக்கது என்று அர்த்தம். இந்த இடத்தில் பரமேச்வர சப்தத்தைவிட பார்வதீ சப்தம் ஸ்வல்பமான அச்சுக்களுடன் கூடி இருப்பதனால் இந்த அல்பாச்தரம் என்கிற பரஸூத்திரத்தினால் அப்யர்ஹிதம் என்கிற ஸூத்ரம் பாதிக்கப் பட்டு, பார்வதீ சப்தத்திற்கு பூர்வநிபாதம் வந்திருக்கிறது. பரஸூத்திரத்திற்கு ப்ராபல்யம் பூர்வபாக்ஷ ஸம்மதமானது. ஸூத்ரம் விப்ரதிஷேதே பரம் கார்யம் என்பதனால் விப்ர என்கிற உபஸர்க்கங்களை முதலில் கொண்டிருக்கிற ஸேத்தி க்கு பாவ ப்ரத்யயம் வந்தால் விப்ரதிஷேத: என்று ரூபம் ஸித்திக்கிறது. இந்த சப்தத்திற்கு பரஸ்பர விரோதம் அர்த்தம். ஸமபலமுள்ள இரண்டு சாஸ்திரங்களுக்கு விரோதம் வந்தால் பரசாஸ்த்ரத்தால் பூர்வசாஸ்த்ரம் பாதிக்கப்படுகிறது என்று அர்த்தம். இந்த சப்த சாஸ்திரப்ராக்ரியையும் நன்றாகக் காட்டி இருக்கிறார். கிரந்தத்தின் தொடக்கத்தில் ‘ஆசீர்நமஸ்க்ரியாவஸ்துநிர்தேசோவாபி தந்முகம்’ என்கிற வசனத்தின்படி செய்யவேண்டிய ஆசீர்வசனம் நமஸ்காரம் வஸ்து நிர்தேசம் இம்மூன்றினுள் அஞ்ஜலி: பரமாமுத்ரா க்ஷிப்ரம் தேவ ப்ரஸாதிநீ என்கிற வசனத்தின்படி தேவதானுக்ரஹ ஸம்பாதகமான அஞ்ஜலி முத்ரையைத் தான் அனுஷ்டித்துக் காட்டி இதே மாதிரி ப்ரபந்த கர்த்தாக்கள் செய்தால் பகவதனுக்ரஹத்திற்குப் பாத்திரமாய் எல்லா அபீஷ்டங்களையு மடைவார்கள் என்பதை காயிக நமஸ்காரத்தால் ஸ்பஷ்டமாகத் தெரிவித்திருக்கிறார். அலங்காரங்களுக்குள் சிறந்த அர்த்தாலங்காரங்கள் நூற்றுக் கணக்காக இருக்க அவைகளை உபேக்ஷித்து உபமாலங்காரத்தை

188802

இந்த சுலோகத்திலெடுத்துக் கூறியதற்கும் திவ்யதம்பதிகளின் ஸ்வபாவத்தை எடுத்து உரைத்ததற்கும் காரணம்யாதெனில் இந்த கவி தனக்கு உபமாலங்காரத்திலும் ஸ்வபாவோக்தி யிலுமுள்ள சாதுர்யத்தை எடுத்துரைப்பதே சைலீ என்பதைக் காட்டி இருக்கிறார்.

தண்டிந: பதலாலித்யம் பாரவேரர்த்தகௌரவம் உபமா காளிதாஸஸ்ய ஸகலம் மாகே த்ரயம் ॥ என்கிற சுலோகம் இந்த விஷயத்தில் ப்ரமாணமாக ஆதரிக்கத்தக்கது. இங்கு உள்ள உபமாபதம் ஸ்வபாவோக்திக்கும் உபலக்ஷணமாம். அலங்கார மென்பது காவ்யங்களுக்கு நிகரில்லாத ஒருவித ஸௌந்தர்யத்தை உண்டு பண்ணுகிறது. ஸஹ்ருதயர்களுக்கு சமத்காரத்தை உண்டு பண்ணுகிற சப்தார்த்தங்களுடைய சக்தி விசேஷமே அலங்காரமாம். அவற்றுள் உவமை ஒன்றே சிறப்புள்ளது. இந்த உவமையைக் காட்டுவதில் இந்த மஹாகவிக்குள்ள ஸாமர்த்தியம் ஒருவருக்கும் கிடையாது. இயற்கையை வர்ணிப்பதிலும் இவ்வண்ணமே. இவ்விஷயங்களிலுள்ள இவருடைய திறமையைக்கண்டு வியப்படைந்த பாணபட்டன் நிர்கதாஸு ந வா கஸ்ய காளிதாஸஸ்ய ஸூக்திஷு । ப்ரீதிர்மதுரஸார்த்ராஸு மஞ்ஜரீஷ்விவ ஜாயதே ॥ என்று ப்ரீதி பரீவாஹத்தால் இக்கவியைத் தன் கிரந்தத்தில் புகழ்ந்தான். ஈச்வராத் ஜ்ஞானமன்விச்சேத் மோக்ஷமிச்சேஜ்ஜனார்த்தனாத் । என்கிற வசனத்தின் படி கிரந்தாரம்பத்தில் கிரந்தத்தை இயற்றுவதற்கு உரிய ஞானத்தை ஈசுவரனிடத்தினின்று வேண்டுகிறார். 'மங்களாதீனி ஹி ஶாஸ்த்ராணி ப்ரதந்தே வீரபுருஷகாணி ச பவந்தி' என்று அபியுக்தர்களின் வசனம் மஹாகவியினால் ப்ரமாணமாகக் கொள்ளப்பட்டது. அவ்வண்ணமே 'ஆயுஷ்மத்புருஷகாணி ச பவந்தி' என்கிற அபியுக்த வசனத்தையும் மனதில் வைத்துக்கொண்டு சப்தார்த்த ஞான நிர்வாஹகர்களான பார்வதீ பரமேச்வரர்களிருவர்களையும் கிரந்தாரம்பத்தில் வணங்கி வழிபட்டார். நாஸ்திகர்கள் செய்யும் க்ரந்தம் போலன்றிக்கே வித்யா மூர்த்திகளாக விளங்குகிற பார்வதீ பரமேசுவரர்களின் வந்தனத்தை முன்னிட்டு உபக்ரமிக்கப் பட்டுள்ள இந்த கிரந்தமானது படிப்பவர்களுக்கும் அர்த்தத்தை அனுஸந்திப்பவர்களுக்கும் ஸகல புருஷார்த்தங்களையும் பயக்கும் தன்மையுள்ளதென்பதையும் ஸூசிப்பித்தார். பிதரௌ என்கிற பதப்ரயோகத்தால் மாதாவான ஜகதம்பிகையினது அனுக்கிரஹத்தால் கிரந்தத்திற்கு புஷ்டியும் ஜகத்பிதாவான ஈச்வரனுடைய அனுக்கிரஹத்தினால் ஸத்விஷயத்தில் ப்ரவ்ருத்தியும் உண்டாக வேண்டுமென்பது ஆசம்ஸிக்கப்படுகிறது. தோஷமிருந்தாலும் புத்திர வாத்ஸல்யத்தினால் மாதா புத்திரனிடமுள்ள தோஷத்தை கவனிக்கமாட்டாள். "ந கச்சிந் நாபராத்யதி" என்றல்லவோ மாதர வாத்ஸல்ய மிருப்பது. மேலும் ப்ரீதி விசேஷத்தால் தோஷம் ஸ்வாத்யமாகக்கூட ஆவதைக் காண்கின்றோம். ஆகையால் மந்த புத்தியுள்ளவனான நான் செய்த கிரந்தத்தில் என்ன தோஷமிருந்தாலும் மாதாவான நீ கருணை புரிந்து மன்னித்து அந்த தோஷங்களை நீயே விலக்கி உலகத்தார் ஆதரிக்கும்படி செய்ய வேண்டியது உன் கடமை என்று பார்வதியை

பிரார்த்திக்கிறார். பாதி ச யஸ்மாத் ஸ: பிதா ஸ ஆஹ்வௌ ஈச்வரச்ச பரமேச்வர: என்கிற வ்யுத்பத்தியினால் நிக்ரஹாநுக்ரஹிகரான ஈச்வரன் பிதாவாக இருப்பதால் பிதாவுக்கு உரிய தண்ட தரத்வத்தை முன்னிட்டு க்ரந்தத்தில் அஞ்ஞானத்தினால் எனக்கு ஏற்படும் குமார்க்க ப்ரவ்ருத்தியை நிவர்த்திக்கச் செய்து நல்வழியில் என்னுடைய புத்தியை நடத்தி என்னைப் பாதுகாக்க வேண்டுமென்றும் கவி சிரோமணி பிரார்த்தித்திருக்கிறார். வந்தே என்கிற க்ரியாபதத்தால் பரதேவதைகளிடத்தில் உத்கர்ஷ ஜ்ஞானத்தையும் தன்னிடத்தில் பரம நிக்ருஷ்டனென்கிற ஞானத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார். இதனால் வித்யையினால் நிறைவுற்றவர்களுக்கு விநயஸம்பத்துத் தான் முக்கிய மென்பதையும் அந்த விநயமானது ஐஹிகம் ஆமுஷ்மிகம் இரண்டையும் ஸாதித்துக் கொடுக்கத் திறமையுள்ளதென்பதையும் விசதமாகக் காட்டினார். இவ்வண்ணம் ஸூக்ஷ்ம த்ருஷ்டியினால் பார்த்தால் மகாகவிகளின் வாக்குக்களில் நிதியில் வைக்கப்பட்டிருக்கிற ரத்தினங்கள் போன்ற அபூர்வமான அர்த்தங்கள் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. அவைகளெல்லாம் சப்தங்களின் சக்தியினாலும் அர்த்தங்களின் காம்பீர்யத்தினாலும் த்வனிக்கின்றன. இப்படி த்வனிக்கின்ற அர்த்தங்களால் சப்தங்களை அலங்கரிக்கிற கவிகள் உலகில் தேடத் தக்கவர்களே. வாச்யார்த்தங்களை விட வ்யங்க்யார்த்தங்களுக்கே மேன்மை ஆலங்காரிகர்களால் கூறப்பட்டிருக்கிறது.

இதமுத்தமமதிசயிநி வ்யங்க்யே வாச்யாத் த்வநிர்புதை: கதித: । வாச்யாதிசாயிநி வ்யங்க்யே த்வநிஸ்தத்காவ்யமுத்தமம் ॥ என்று ஆலங்காரிகர்கள் கூறுகின்றனர். ரஸத்வநிப்ரதானமான உத்தமோத்தம காவியங்களைச் செய்பவர்களுக்குள் வால்மீகியே முதன்மை வாய்ந்தவர். அதற்குப் பிறகு ஸரஸமான காவியங்களை இயற்றும் விஷயத்திலும் ரஸங்களை வ்யக்தமாகக் காட்டுவதிலும் இந்த மகாகவி அநிதரஸாதாரணமான பாண்டித்திய முள்ளவர். ஸ்ரீகுருகடாக்ஷ மாஹாத்ம்யத்தால் ஒரு சுலோகத்தை எடுத்து என்னுடைய சிற்றறிவுக்கு எட்டினமட்டும் உசிதமாகத் தோன்றின அர்த்தங்களை நிரூபணம் செய்திருக்கிறேன். இவ்வண்ணமே காளிதாஸ மகாகவியின் ஸூக்திகளில் அடிக்கடி ஒவ்வொரு சுலோகத்திலும் வாக்கியத்திலும் பதத்திலுமுள்ள அர்த்த ஸ்வாரஸ்யங்களை எடுத்துக் காட்டலாம். ஸஹ்ருதயர்களுடைய ஹ்ருதய்பரிபாகமே இதற்கு ஸாக்ஷ்யம்.

ஸரஸ காவ்யநிஷேவண தத்பரா: ஸஹ்ருதயா: ஸரஸா: ஸுமனோமயா: ।
ஸததமேவ ஸதாம் ஹிதகாரிண: ஸஹ்ருதயாய நம: நம: ॥

ஸ்ரீகுண ரத்ந கோசம்.

[வித்வான் ஸ்ரீ உப. எ. வி. கோபாலாசாரியர், எம்.ஏ., பி.எல்.]

ஶரணாகத ஸஸ்யமாலிநியாக பூமிப்பிராட்டியைச் செய்து தாங்கள் ரமிக்க இங்கே க்ருஷீவலர்களாய் அவதரித்தவர் இவ்விருவர். ஸஸ்யங்கள் அங்குரிப்பதையும் துளிர்விடுவதையும், செழித்து வளர்வதையும், பலிப்பதையும் ஆவலுடன் பதே பதே வீக்ஷணம் செய்துகொண்டு ஸந்தோஷிப்பர் க்ருஷீவலர். உத்யான பாலர்களும் அப்படியே புஷ்ப விருக்ஷங்களையும் பலவிருக்ஷங்களையும் அநவரதம் ஆவலோடு பார்த்துக் கொண்டேயிருப்பர். 'ஞுஷெ வஃ கூஹாஉவூஹூதி ஹஉயெ யஹஷூாஹவதஜூதூவஃ' என்கிறபடி செடிகளின் ஸம்ருத்தி வளர்க்கிறவனின் உத்ஸவமாகும். இவள் விலக்ஷணமான பாலிகையானபடியால் செடிகள் கோரகிதமானுல் இவள் கடாக்ஷமும் ஸமாந தர்மமாய்க் கோரகித மாகிறதென்று பாவம். உல்லாஸ மென்பது விபஜனத்தைச் சொல்லும். சிதசித்துக்கள் நாமரூப வ்யாகரணத்தால் விபக்தமாவதைக் கொள்ளலாம். காவ்யப்ரகாசத்தின் விபாகங்களை உல்லாஸங்களென்பர். 'ஜெஉ'—என்பது 'ஶஶஂஷக்ஷக்கரூணாநிரீக்ஷணஂ' என்பதையும், 'கடாக்ஷஉஜதூ வீக்ஷணஃ' என்பதையும் அநுஸந்தித்து ஈக்ஷ என்கிற அர்த்தத்தைச் சொல்லும். இந்த ச்லோகத்தில் 'ஸ்ரீயஉாஸ்ரயாஉஃ' என்று ஆச்ரயணரூபமான ஶரணப்ரதாநம் ப்ரஸக்த மாகையால் 'உஜெணைவாநூஹாரணீயஂ' என்கிற நியாயத்தை அநுஸரித்து சப்தமாத்ரத்தால், 'வஷஜெஉீஂ ஶரணஂவூவஷெதூ' என்கிற ஸ்ரீஸூக்த மந்த்ரம் ஸ்மாரித மாகிறது. 'கடாக்ஷியூாஂ' என்பதால் 'ஷீயூாகெவஜூஂ' என்று சொன்னது இவள் கடாக்ஷலீலையை ஜகந்நிர்வாஹன ஹேதுவாய்ச் சொன்னதென்று ஸூசனம். இவள் கடாக்ஷலீலை ப்ரயோஜனமாகு மென்றும் ஸூசனம். இவள் தயா ஸ்வரூபிணியானபடியால் தயையினுலேயே ஸ்ருஷ்ட்யாதி ஜகந்நிர்வாஹம் நடக்கிறதென்கிற தத்வம் காட்டப்படுகிறது. இது கீதா பாஷ்யத்திலும், தாத்பர்ய சந்திரிகையிலும், தயாஶதகத்திலும் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி தயாஶதக வியாக்யானத்தில் விஸ்தரித்திருக்கிறோம். இந்த ப்ரபஞ்சமென்னும் தோட்டத்தின் நடுவில் தோட்டக்காரரான இந்த தம்பதிகள் ஸ்ரீரஂம ஹஉதூதஜ மென்கிற ஒரு ப்ராஸாதத்தில் வஸிக்கிறார்கள். இவர்கள் எங்கு வஸித்தாலும் அந்தவிடம் வைகுண்டமாகும். இவர்கள் இங்கே ஸ்ரீவைகுண்டமென்னும் ஸ்தலத்திலேயே வஸிக்கிறார்கள். வைகுண்டம் ஹிரண்மயபுரமாயிருப்பது போல் இந்த ரங்கவிமானம் ஸ்வர்ண விமாநம். 'அகாரூ உாதா ரூாஉஹூ ஂமஙாநி யஶ ஹூநீ'—என்கிறபடி ப்ரஜைகளின் மங்களத்தையே ஆசாஸிப்பது மாதாவின் ஸ்வபாவமானபடியாலே இவள், தன்னிலும் உயர்ந்த மங்களத்ரவ்யமில்லாததால் தானே மங்கள தீபரேகையாய் நிற்கிறாள். பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கஹர்ம்ய தலமானுலும் இவளில்லாவிட்டால் அது

விளக்கில்லா இடமாகும். 'ஂமஙாயதநஂ ஹரிஃ, ஂமஙாநாஂ அ ஂமஙஂ—என்று வர்ணிக்கப்படும் பெருமாளுடைய ஆயதநத்தில் இவள் அதற்கு ஏற்றங்கொடுக்கும் மங்கள தீபரேகை. 'ஓஂகாரஶூாய ஶஷஶூ'—என்கிற வசனப்படி ஸ்வதோ மங்களகரமான ஓங்கார வீட்டில் இவள் மங்கள தீபரேகையாகிறாள். ஓங்காரம் கண்டத்தைப் பேதித்துக்கொண்டு வெளிப்பட்டு மங்களமாகவேணும். இவள் ஸம்ஸார இருளையும் அகற்றிக்கொண்டு ப்ரகாசத்தையும் கொடுத்துக்கொண்டு தீபமாகிறாள். ஸ்ரீரங்க என்கிற பதத்தால் மங்களகரமான ஓங்கார விமானத்துக்கு மேல் ஸர்வமங்களங்களுக்கும் ஆச்ரயமும், தர்மியும், மூலமுமான இவளுடைய அதிசயித மங்களத்வத்தை வ்யஞ்ஜிப்பிக்கிறார். 'ஸஞாரிணீ தீவஶிவெவ ராதூள'—என்று ரகுவம்சத்தில் பதிம்வரையான யுவதி மார்க்கத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு போகும். ஒரு ரேகைக்கு ஒப்பானவளென்றும், போய்க்கொண்டிருக்கும் அந்த ரேகை ராஜமார்க்கத்திலிருக்கும்படியான அந்தந்த ஹர்ம்யங்களை ப்ரகாசத்தால் ஹ்ருஷ்டமாய்ச் செய்து, அந்தந்த ஹர்ம்யம் தாண்டிப் போனபின் இருட்டென்கிற வைவர்ணியத்தை அடைவிக்கிறதாகச் சொல்லப்பட்டது. அந்த ச்லோகம் இங்கே கவியின் புத்தியிலிருக்கிறது. அதிஸ்வரஸமாக அதற்கு வைஜாத்யம் இந்த லோகமாதாவான மஹிஷீ விஷயத்தில் காட்டப்படுகிறது. இவள் ஸஞ்சாரியான தீபமல்ல. ஸ்தாயியான தீபம். இவள் எல்லா ப்ரஜைகளையும் ப்ரகாசப்படுத்துவளே யொழிய ஒருவருக்கும் வைவர்ணியம் உண்டாக்குவதில்லை தீபரேகையென்று கூறியது, 'விஷூயெூவெவ ஹாஹூரா'—என்கிற ச்ருதியை அநுஸரித்தது. இவர் வேதாந்தியான கவி. ஆசார்யனை கவி. (ஸ்ரீரஂமராஜ உஹிஷீஂ ஸ்ரீயஉாஸ்ரயாஉஃ) இந்துமதி யென்கிற மஹிஷியாகப் போகிறவள் தீபரேகைக்கு ஒப்பிடப்பட்டாள். இவள் நித்ய ஸித்தையான மஹிஷி. ஸர்வேச்வரனுடைய மஹிஷி. முதல் ச்லோகத்தில் சொன்ன ஜகத்ஸ்ருஷ்டியில் கடாக்ஷித்த ஆதியஞ்சோதியான ஸ்ரீயை இங்கே ஸ்ரீரங்கராஜ மஹிஷியாய் அவதரித்திருக்கிறாள், என்று அபேதத்தைக் காட்ட இரண்டையும் சேர்த்துப் படித்தார். 'ஸ்ரீயஂ'—என்றதால் நாம் எல்லோரும் ஆச்ரயிப்பதற்காகவே இங்கு இவள் அவதரித்திருப்பதால் இவள் மநோரதத்தை ஸார்த்தமாகச் செய்ய இவளை நாமெல்லோரும் ஆச்ரயிப்போமாக, என்று பாரிக்கிறார். ஸ்ரீ சப்தத்தின் ஒவ்வொரு வ்யுத்பத்தியால் ஸித்தமான மஹிமையை அங்கங்கே காட்டுகிறார். முதல் ச்லோகத்தில் அஞ்சலி செய்யப்பட்டது என்று மட்டும் கூறினார். அந்த ச்லோகம் அப்ரத்யக்ஷமான ஆதி ஸ்ரீ விஷயமாயிற்று. அவள் விஷயமாய் அஞ்சலி செய்யக்கூடச் சேரும்படி கூப்பிட்டால் சேருவரோ மாட்டாரோ வென்று ஸம்ஸயம். ஒருவராய் அஞ்சலி செய்யத் திருவுள்ளமில்லை. ஸங்கமாய்ச் செய்வதில் நோக்கு. அதனால் ஒருவராலோ அல்லது பலராலோ என்று குறிப்பிடாமல் பொதுவாய் அஞ்ஜலி செய்யப் பட்டதென்றார். இங்கே இந்த மஹிஷி ப்ரத்யக்ஷமான மங்கள தீபரேகையாய் ஸேவை ஸாதிப்பதால் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக ஆச்ரயிக்க ஸௌகர்ய மாயிற்று.

ஆச்ரயிக்கப் படுகிறாளென்கிற ஸ்ரீ சப்தத்தின் வ்யுத்பத்தியைக் கொண்டு இந்த ஸ்ரீயை ஆச்ரயிக்கிறேனென்றார். இவள் பரம புருஷனை ஆச்ரயித்தாலன்றோ இவளை நாமாச்ரயிப்பது ஸபலமாகும் என்று சங்கை வர இவள் இவனை காடமாய் ஆச்ரயிப்பதைக் கூறுகிறார் :—

ப்ரபஞ்சம் உத்யானமாயிற்று. அதில் இவ்விருவரும் தோட்டக்காரர் என்றார்—தாமே காரியமாகிறவர்கள். அந்த உத்யானத்தில் தாமும் செடியும் கொடியுமாய் இருக்கவேண்டாமா? என்றால், அப்படியே இருக்கிறார்களென்கிறார்.

மங்களத்துக்காக இவளை தீபரேகை யென்றார். அதனால் ப்ரயுக்தமான ஔஷ்ண்யமுண்டோ வென்கிற சங்கை உதிக்க இவள் குளிர்ந்த கல்பவல்லி யென்கிறார். கொழுக்கொம்பில் ஏறி அணைந்தாலல்லவோ கொடிக்கும் விருக்ஷத்துக்கும் பரஸ்பர சோபை. இந்தக் கொடிக்கு ஆச்ரயிக்க ஒரு அநுரூபமான விருக்ஷமும், இந்தக்கொடியில் பூங்கொத்துக்களும் புஷ்பங்களும் அதில் வண்டுகளும் இருப்பதாக ஸாவயவ ரூபகமாய் வர்ணிக்கிறார். முன் ச்லோகத்தில் கோரக சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. பெருமாளும் பிராட்டியும் ஸம்ச்லேஷிப்பதை வர்ணிக்க உபக்ரமிக்கிற பொழுது கோரக சப்த ப்ரயோகத்துக்குப் பிறகு ‘ராயாயா ஷ்டகோர கொவரிஅஷுனைதௌ ஹரிঃ வாதவঃ’ என்கிற ஜயதேவருடைய கீத கோவிந்த ச்லோகம் ஸ்மரிக்ஷமா யிருக்கலாம். (ஸுகோதரமைதாகி) இரண்டு லாவண்ய ஜலயிகளின் ஸங்கமம். ‘ஸுபரிமிர வமிரமொஹரா ஹிதைகெகஷொஷோঃ’—என்கிறபடி பரஸ்பர பரிஷ்வங்க லோலதை உசிதம். ‘ஸுவ‌ெவதஶவஷியஶாதகாக க்ஷணெ க்ஷணெ யநவதாசவெதி தஷெவாவெஂ ரஊணீயதாயாঃ’ என்கிறபடி, ‘ஷ்வெஷ ராவெதண வஷாநரதயாவத் வவெஶவஷியஶாஷயாநயா’ என்று ஆளவந்தார் ஸாதித்த ச்லோகம் இங்கே புத்திஸ்தம். ‘க்ஷணெ க்ஷணெ’ என்பதை ‘ஸுநகம’ மென்கிற சப்தத்தால் காட்டினார். கலா என்பது காலத்தினுடைய அத்யல்ப பாகத்தைச் சொல்லும். கலையென்கிற ரஸிகபோக கலையையும் சொல்லும். அந்த ச்ருங்கார கலைகளிலிருப்பதை அநுஸரித்து என்றும் அர்த்தம் கொள்ளலாம். இரண்டர்த்தமும் கிடைக்க, ‘வருதி’ யென்று போடாமல் ஸுந வென்று வைத்தார். இவர்கள் போகங்களைச் சொல்ல ஆரம்பிக்கும் பொழுது பரஸ்பர ப்ராதிகூல்யத்தை காட்டக்கூடிய ‘வருதி’ சப்தத்தை முதலில் வைப்பதில் திருவுள்ளமில்லை. ஆனால் ‘வருதிஷிப’—என்று பின்னால் கூறுகிறது ஒருவருக்கொருவர் புஜங்கள் காடா ச்லேஷத்தில் ப்ரதியாயிருக்க வேண்டிய ஔசித்யத்தைப் பற்றி ‘வதாவரதைகெகஷொஷோঃ’—என்பது அதை அபேக்ஷிக்கும் ப்ரம்ஹம் தன் ப்ரீதியைக் காட்டுவது காடபரிஷ்வங்கத்தாலேதான். ‘வாஜெஶகாதநாவஸவரிஷகঃ’—என்றும், ‘வாஷ வவஶவவஶதொஶவரிஷஷঃ’—என்றும் சேதனர்கள் விஷயத்தில் இந்த பரிஷ்வங்க லோலதை ப்ரஸித்தம். உநঃகாமெயான மஹிஷி விஷயத்தில் இது கைமுத்ய ஸித்தம். இவளுடைய ஸ்வயங்க்ருஹங்

களை முதலில் சொல்லுவதில் நோக்கு. ப்ரஜைகளுக்காக நாயக வால்லப்யத்தை ஸம்பாதிக்க இவள் வலுவில் அவனை ஆச்ரயிப்பதைச் சொல்லும் ப்ரகரணம். கொடியுபமானமும் விருக்ஷத்தைத் தானாக நெருங்கி அணைவதைக் காட்டுகிறது. இவள் ஸ்வயம்க்ருதங்களுக்கு அப்பொழுதப்பொழுது ப்ரதியாக நாயகாச்லேஷமும் இரண்டாம் பாதத்தில் ஸ்பஷ்டமாய் கூறப்படுகிறது.

‘தநகாஂஶ’—என்பதால் காத்ர யஷ்டியைச் சொல்லுவது. தநு சப்தத்தால் இவள் தந்வி யென்றும் அதிஸுகுமாரமானவளென்றும் ஸூசிதம். சிறு காத்ரமா யிருந்தும் விச்வரூபம்போன்ற பெருமாளுடைய திருமேனியை இவள் தனக்குச் சிறிதாகும்படி தன்னை விஸ்தாரப்படுத்திக் கொள்ளுகிறாளென்று பின்னால் கூறுகிறார். ‘ஸுணொரணீயாநஹதொசஹீயாந’—என்பதை ஸ்மரிக்கவேணும். ஆலிங்கனம் ப்ரதிக்ஷணமும் நவநவமான ஆரம்ப மாத்ரம். ‘பொஹஸ’ என்பதால் ஸ்வயம் ப்ரகாசமும் சுத்த ஸத்வமான பெருமாளுடைய திருமேனி ‘வருதீவவஷாவெப:’—என்ற நியாயத்தைப் போல் யதேஷ்டமாய் நீண்ட ப்ரகாசத்தை அடைகிறது. ப்ராக்ருத த்ரவ்யம் போல் இது ஸ்தௌல்யத்தை அடைய ஸ்தூலமான உரபிதான த்ரவ்யாதிக்யத்தை அபேக்ஷிக்க மாட்டாதென்றும் ஸூசிதம். இது ஸ்வரூபத்தைப் போல ப்ரகாசமாத்ரமே. இதன் விஸ்தாரம் ப்ரகாச விஸ்தாரமே. ‘வருதிஷிபஹஜபாவ’—என்பதால் நான்கு திக்கால் நான்கு புஜம்; எட்டு திக்கால் எட்டு புஜம். அதிகதிசாபாகம் விவக்ஷித்தால் அதற்கநுரூபமான ஸங்க்யை என்று பாவம். இங்கே காடோப கூடத்வத்தைக் காட்டுகிறார். இந்தக் கொடி விருக்ஷம் முழுவதும் அணைந்து மேலும் இடம் போதாததால் விருக்ஷம் புதிது புதிதாகக் கிளைகளை விடுகிறது. கிளைகள் விட்டவுடன் கொடி போய் ஏறி மூடிக்கொள்கிறது. மறுபடியும் கிளைவிடுகிறது. இப்படியே சாகோபசாகம் வரிரஂஹவரஸஂ. இந்த விருக்ஷத்திற்கு ஸ்ரீஸகனென்று திருநாமம். ஸ்ரீவணஂ போல் இது ஒரு சந்தன விருக்ஷம். ஹரி சந்தனம் என்றும் அந்த விருக்ஷத்துக்குப் பெயர். ஹரிசந்தனமே ஸ்ரீ கண்டமாகும். இந்த விருக்ஷம் லக்ஷ்மிக்கும் ஊஸி யென்கிற லக்ஷ்மியாகும். பெருமாள் ஸ்ரீக்கும் ஸ்ரீயாவர். ‘ஸ்ரியஸ்ரீஸ்வஹவெஷமருதீ’—என்று ஸௌமித்ராமுகமாய் மஹர்ஷியின் வார்த்தை. அதைக்காட்ட ஸுநொகஹமயிஶঃ என்று ஊஸி கடிதமான ஸவிஹியை லக்ஷ்மியென்றும் கல்பவல்லி விஷயத்தில் ப்ரயோகித்தார். இந்தக் கொடியில் ஸ்தனங்கள் யென்கிற பூங்கொத்தாகும். ‘ஷுக்ஷீஷநஷப’ என்று ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் ஸாதித்தார். இவளுடைய நயனங்கள் மலர்ந்த புஷ்பமாகும். அந்த நயனங்களிலுள்ள கருவிழிகள் அப்புஷ்பங்களில் வண்டுகளாகும். இந்தக் கொடி அபீஷ்டத்தை யெல்லாம் கொடுக்கும் கற்பகக் கொடி. இவள் என்னிடம் கடாக்ஷங்களை ரசனை செய்யட்டுமென்று ப்ரார்த்திக்கிறார்.

பெருமாளோடு போக சேர்த்தியிலிருக்கும் அவஸரத்தில் இந்த கடாக்ஷ

ரசனை ப்ரார்த்தனையைச் செய்கிறார். ஜகத் ரசனை செய்தது பெரிதல்ல. அது ஒரு சிறிய வியாபாரம். அநாதிகாலமாய் எத்தனையோ தரம் ஜகத்ரசனை செய்தும், பாவியேன்; இவள் கடாக்ஷ ரசனை விஷயமாக ப்ரார்த்திக்கப் பெற்றிலேன். அகன்றே ஓடினேன். கடாக்ஷ ரசனையை இவள் செய்யட்டுமென்று ப்ரார்த்திக்கிறார். இந்த ச்லோகத்தில், **அமூதைந ஸம்மதவதீ நவசாஷிகெயம்**'—என்ற மஹாகவி வர்ணனம் நினைக்கத் தக்கது.

ஶ்லோ || **யஃ ஹூஷஸம்மாஃ வ்யசரணம் ஷ்ஸ்ரஅர ரஅநா தார தவைத் உபுரா-**
ரெஃ வெஷாஷ்காலக்ஷவிஷ்நம் உபுரஹிஷபுரவியகௌ வாஷ் அிவைஷ்ந-
ஷுரம்தி । ஷொமெஈவொஷாத கெவீஅஉசித ஹமவமைஹு-
ரவெஷூந ஹாவா வாநஃ ஸ்ரீராஹுணீதாஉவ்ரதயூஹரியிஷம்வ
நீயெரவாமமெஃ || ௪ ||

'**ரஅயகௌ**' என்று ரசனையைச் சொன்னதும் ஸ்திரசரரூப ஜகத்ரசனை புத்திஸ்தமாயிற்று—மூன்று ச்லோகங்கள் சொன்னோம். ச்ருதிகளைப் போல '**யதாவ்வொவ நிஷ**'மாய் இவளுக்கு ஒரு லக்ஷணம் சொல்லவேண்டுமே. இந்த ஸ்தோத்திரத்தில் முதல் தசகத்திலே ஸ்துதியின் தௌஷ்கர்யத்தை உபபாதித்து ஸ்துதிசெய்வதற்கு உபயுக்தமான வாகர்த்தங்கள் இவள் கடாக்ஷங்களால் ஸித்திக்கவேண்டுமென்று பிரார்த்தித்து ஸ்தோத்ராரம்ப ஸமர்த்தனம் செய்கிறார். (**ஷ்ஸ்ரஅர ரஅநாதார தவைத்**) ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் ஸ்ருஷ்டிப்பதில் உள்ள தாரதம்ய விஷயத்தில்—இங்கே தாரதம்ய சப்தத்தில் உள்ள ஸ்வாரஸ்யம் கவனிக்கத் தக்கது. சிதசித்ரசனையும் நாமரூப வ்யாகரணமும், '**யஹாவாவெஷஉகவுயகௌ**'—என்றபடிக்கும், '**வெஷஶபெஹூ ஷவாஷள ஷெவாதீநாஅகாரவஃ**'—என்றும் முன் கல்பங்களைப்போல ஸமான நாம ரூபமாகச் செய்யப்படுகின்றன. அந்த விஷயத்தில் வேதாதிகளும் பூர்வகல்பத்தின் ரூபங்களின் ஸ்மரணமும் ப்ரமாணமாகும். சரீரங்களிலும் போகங்களிலும் ஜகத்தில் தாரதம்ய மிருப்பது பிரஸித்தம். முக்தியில் தாரதம்யத்தைப்பற்றி விவாதமிருந்தாலும் இந்த லீலாவிபூதியில் தாரதம்யத்தைப்பற்றி விவாதமில்லை. இந்த தாரதம்யமென்கிற வைஷம்யத்துக்கு அந்தந்தப் ப்ராணிகளின் கர்மங்கள் காரணமாகும். இந்தத் தாரதம்ய விஷயத்தில் பிராட்டியின் ப்ரூபங்கங்கள் பெருமாளுக்கு ப்ரமாணமாகுமென்று இங்கேயும் மேல் ச்லோகங்களிலும் கூறப்படுகிறதற்குப் பாவமென்ன? அவரவர்கள் கர்மாநுரூபமாய் ஒரு சரீர விசேஷத்திற்கும் சிலபோகங்களுக்கும் போக்யமாயிருந்தாலும் '**கருணாம் ஹொகஉாதரம**'—என்று லக்ஷ்மிஸஹஸ்ர நாமத்தில் சொல்லியபடி கருணாரூபிணியும் தாயுமான பிராட்டி தன் தயையினால் கர்மாநுரூபமாய்க் கிடைக்கவேண்டியதைக் கொஞ்சம் மாற்றி அதற்கு மேல்பட்ட பலத்தைக் கொடுக்கும்படி தன் ப்ரூபங்கங்களால் காட்டி அப்படியே ஈச்வரன் நடத்தும்படி செய்விக்கலாம். தயையினால் அபராதங்களைப் பொறுத்துக் கழிப்பதும், செய்த புண்யத்திற்கு மேல் அதிகமான பலத்தைக் கொடுப்பதும்

லோக வேத ப்ரஸித்தம். ஈச்வர பத்நி விஷயத்தில் அஞ்சலி முதலியது செய்து அவள் தயையைப் பெற்றிருந்தால் அது வீண் போகாது. இவள் ஈச்வரனுடைய தயையே வடிவானவள். கர்மாநுகுணமாகச் சரீரப்ரதானம் செய்யவேண்டியிருக்கையில், இவளுடைய தயையினால் அதை மாற்றி எவ்விதமான சரீரத்தையும் போகங்களையும் கொடுக்கையில் இந்தத் தயாமூர்த்திக்கு நோக்கிருக்கிறதென்று இவளுடைய ஸூசேங்கிதங்களால் தெரிந்துகொண்டு, அதற்கனுகுணமாகப் பலப்ரதானம் செய்கிறான். தாரதம்யத்தில் அவனவன் பூர்வ கர்மம் ப்ரமாணமானாலும் அதையும் மாற்றித் திருத்துவதற்கு தயையான இவளுக்கு அதிகார முள்ளதால் இவளது ப்ரூபங்கங்களை கர்மத்திற்கும் மேல்பட்ட பிரமாணமாகச் சொல்லத்தட்டில்லை. '**ஜொகெ வநஷதி பரஹஷதிதார தூஷ்ம்**' என்கிற ஸ்ரீஸ்தவ ச்லோகத்தை அநுஸரித்து இங்கே தாரதம்ய சப்த ப்ரயோகம் '**யஃ ஹூஷஸம்மாஃ உபுராரெஃ வ்யசரணம்**!—முராரியை அறிய சாஸ்திரம் நமக்கு ப்ரமாணமாகும். முராரிக்கு இந்தத் தாரதம்ய விஷயத்தில் ப்ரூபங்கங்கள் ப்ரமாணமென்பது வேடிக்கை. '**கடாக்ஷுாஹாய**'—என்று முன்னுதாஹரித்த ச்லோகத்தில் பிராட்டியின் கடாக்ஷ லாபத்திற்காக லோக ஸ்ருஷ்டியையும், '**ஹதஷாரம் வரிஷஹஜெ**'—என்கிறபடி இவளுடைய பரிரம்பண லாபத்திற்காகப் பராக்ரமத்தையும், இவளுடைய மோதத்திற்காக முரபித்தானவன் சேதன மோக்ஷத்தையும் செய்கிறானென்று கூறுகையில் பகவான் 'முரபித்து' என்று நிர்த்தேசத்தை அநுஸரித்து அந்த வசனத்தை ஞாபகப் படுத்த முராரெஃ என்றும் '**உபுரஹிஷபுரவி**'—என்றும் நிர்தேசிக்கிறார். இது ப்ராட்டிக்கே ஒரு விசித்ரமான லக்ஷணம். '**வெஷாஷ்காலக்ஷவிஷ்நம்உபுரஹிஷபுரவி யகௌ வாஷ் அிவைஷ்நஷுரதி**'—என்ற ப்ரமாண ப்ரஸ்தாவம் வரவே அபூர்வ விஷயத்தில் ப்ரமாணமான வேதாந்தங்களின் உபஸ்திதி வந்தது.

ஈச்வரனுக்கு ஒரு விஷயத்தில் இவள் பிரமாணமானால், பிரமாணமான சாஸ்திரத்திற்கும் இவள் பிரமாணமாகிறாள். உத்க்ருஷ்டமேயான ஈச்வரனுக்கு ப்ரமாணமானது மன்றியில் மாநமான வேதாந்தங்களுக்கும் இவள் மாநமாகிறாள். இப்படி ப்ரமாணத்திற்கும் ப்ரமாணமென்று ஸித்திக்கிறது. சாந்த ஸர்வாகாங்க்ஷமாய் காரணவிசேஷ நிர்ணயம் செய்ய வேண்டியது அவச்யம். '**தஷம் ஜிஜ்ஞாஸஉாநாநாம் தூயீநஃ வரஉாமதிஃ**'—காரண விசேஷத்தைப்பற்றித் தத்வ நிர்ணயத்திற்கு வேதாந்தங்களைக் கொண்டு நாம் ஜிக்ஞாஸையும் மீமாம்ஸையும் செய்யவேணும். வேதாந்தங்கள் ஸ்வயம் சங்காதாரணம் செய்து நிர்ணயித்து நம்முடைய சங்கையைத் தாரணம் செய்யவேணும். வேதாந்தங்கள் காரணத்தை '**யகௌ யகௌ—தகௌ தகௌ**' என்று ஸர்வநாம சப்தங்களால் ஸமான்யமாக நிர்த்தேசித்துக்கொண்டு பரமகாரண வ்யக்தி விசேஷ நிர்ணயத்தை மார்பிலிருக்கும் லக்ஷ்மியென்கிற பத்நியின் பாதலாக்ஷா ரஸாங்கத்தால் தெளிந்து கொள்கின்றன. பெருமாள் திருமார்பில் இவளுடைய பாதசின்னங்கள் வ்யக்தி நிர்ணாயகம். இவள் ஸூசேங்கிதங்கள் பெருமாளுக்கு

ப்ரமாணம். பெருமாள் திருமார்பிலுள்ள இவள் பாதசின்னங்கள் வேதாந்தங்களுக்கு ப்ரமாணம்—'காஸ்த்வதூ... ஸ்ரீராமானுஜ...' என்கிற பராசர வசனம் இங்கே ஸ்மரிக்கத்தக்கது. இந்த இரண்டு பாதங்களிலும் சொல்லப்படும் விஷயங்களைப் பின் ச்லோகங்களில் விஸ்தாரமாக்கப் பேசுகிறார். இவ்விரண்டு பாதங்களாலும் இவளுடைய வால்லப்யம் நிரூபிக்கப்பட்டது. இவ்வளவு பெருமையுடையவளை நாமெப்படி அடைகிறது, அவளை எப்படி நாம் நம்முடைய சக்ஷுஸ்ஸால் ஸாக்ஷாத்கரிப்போம், என்று சங்கை உதிப்பதைப் பின்பாதியில் பரிஹரிக்கிறார். இவளுடைய வால்லப்யாதிசயத்தையும் காட்டுகிறார். (...) தன்வியா யிருக்குமவள் வைச்வ ரூப்யத்தையுடைய ... என்கிற திருநாமத்தால் ப்ரம்ஹ ஸ்வரூபத்தைப்போல் மிகுந்த ப்ருஹத்வத்தை யுடையதான பகவானுடைய திருமேனியோடு காடாலிங்கனத்தால் முன் ச்லோகத்தில் ஸாதித்தபடி எப்படி வசப்படுத்தி அவனுக்கு வல்லபையாவாள்? கொடிபோன்றவிவள் சிறிய திருமேனி விச்வரூபமான பெருமாள் திருமேனிக்கு எப்படி அனுரூபமாகும்? இரண்டு திருமேனிகளும் முழுவதும் ஸம்ச்லிஷ்டமாக வேண்டுமே? போகாரம்பத்திலேயே இவள் பெருமாள் திருமேனிக்கனுரூபமாய் தன் விக்ரஹத்தை விஸ்தாரப்படுத்திக் கொண்டு அவர் திருமேனி சிறியதோ என்று நினைக்கும்படி செய்கிறாள். ... கேளி'—என்பதால் கேளியாரம்பத்திலேயே தன் திருமேனியை விஸ்தாரப் படுத்திவிடுவதால் கேளிமுழுவதிலும் காட ஸம்ச்லேஷத்திற்குக் குறைவில்லை என்று வ்யஞ்ஜிதம். போகத்தில் பூர்வ கேளியென்பது காம சாஸ்திர ப்ரஸித்தம்.

ஸாஸ்ரீ:—அந்த ஸ்ரீயானவள். விஸ்தாரப் படுத்துகிறவள் என்கிற வ்யுத்பத்தி இவளுடைய திருமேனியை விஸ்தாரப்படுத்துவதால் ஸார்த்தகமாயிற்று. அதைச் சொன்னதும் ஸ்ரீ: என்று நிர்தேசிக்கிறார். இவளுடைய பத்னீத்வ ஸம்பந்தத்தை முன்னிட்டு பெருமாளைக் காரணமென்று தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று. எல்லா தேவர்களும் கண்ணைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கையில் இவள் அவருடைய வக்ஷஸ்தலத்தை அடைந்தாள். மிதிலா நகரத்திலுள்ள ஜனங்கள் சக்கிரவர்த்தி திருமகனை ஸீதாபதியென்றே அறிந்து வ்யவஹரிப்பது போல் ஸர்வஜகத்தும் இவள் பதியென்றே பெருமாளை வ்யவஹரிக்கவேண்டும். (... ஸ்ரீரங்கதுரீணஸ்ய ... ஸுஸ்தருணீதாம்). நான் இவள் பக்கல் நெருங்க முடியாவிட்டாலும் இவள் கடாக்ஷங்கள் நம்மை நெருங்கி நமது மேல் விழும். அவ்வளவு பெருமையையுடைய இவளுடைய அபாங்கங்களை நாம் எப்படித் தெரிந்துகொள்கிறது. லங்கனம் என்பது இரண்டாம் பாதத்தில் சொல்லும் தரண சப்தம் போல் ப்ராப்தியைச் சொல்லும். அந்த இடத்தில் சிந்தையைத் தாண்டுகிறதென்று அர்த்தமாயிருந்தாலும் அந்த சப்தத்திற்கு ப்ராப்தியென்ற அர்த்தம் உண்டு. அங்கே உபயோகித்த ரண சப்தஸ்தானத்தில் இங்கே லங்கன சப்தத்தை உபயோகித்தார். இவளுடைய அபாங்கங்கள் நம்பேரில் விழுகிறதென்று நாம் எப்படித் தெரிந்து கொள்ளுகிறதென்றால் நம்பேரில் அம்ருத ப்ரவாஹம் அலைமோதிக் கொண்டிருப்பதால் இந்த அம்ருதலஹரி இவள் கடாக்ஷ லஹரியாய்த் தானிருக்க வேணுமென்று தெரிந்து கொள்ளக்கூடும். ஸுஸ்தருணீதாம்—அம்ருத லஹரிபோன்ற தன் கடாக்ஷங்களினால் என்னை வ்யாபித்துச் சூழட்டும். ஆஸ்தரணத்துக்குப் பலமான ஆச்சாதநமும் நம் தோஷங்களைப் பெருமாளுக்கு தெரியாமல் மறைக்கும், '...' என்கிற காதிர க்ருஹ்ய ஸூத்ரப்படி சாதநார்த்தமாக ஆஸ்தரணம் செய்வதென்று சொல்லலாம். பெருமாள் ஸ்தோத்ரத்தில் இரங்காமல் இவள் ஸ்தோத்ரத்தை ஆரம்பிப்பதற்கு இந்த ச்லோகத்தில் கூறிய அம்சங்கள் ஹேதுவாகும்.

THE UBHAYA VEDANTA PRAVARTANA SABHA.

The Thirtieth Year's Conference of the above Sabha took place as usual in the Sri Narayanaswami Temple at Melkote on the 23rd April 1931 at about 5 p.m. under the presidency of Sri U. Vidwan Tirumalisai Ramanujachariar. A large number of people, including a good many ladies, had assembled to witness the prize-giving ceremony. Among those present may be mentioned Vidwan Kanchipuram P. B. Annangachariar, Vidwan Iyalpalli Varadachariar, Vidwan Jayaram Venkatachariar, Vidwan Devasikhamani Ramanujachariar, Vidwan Purohit Tirunaraniengar, Vidwan Nuggehalli S. Tirunarana Iyengar, Vidwan Nuggehalli S. Narasimhachariar, Vidwan R. A. Iyeniengar, Vidwan Aghalayam Tirunaraniengar, Vidwan R. A. Krishnamachariar, Vidwan Sampatkumarachariar, Vidwan Tiruvaimoli Ramanujachariar, Vanamamalai Pandit Ramanujachariar, Palace Ritvik Gomatam Srinivasa Josyer, Veda Vidvan Parankusachariar, Vidvan N. Venkatanarasimhachariar, and Vidwan H. Srinivasachariar; and Messers. A. Govindachariar, N. Anandalwar, B.A., B.C.E., R. Tirunaraniengar, B.A., Aji Ramanuja Iyengar, Srirangam Srinivasa Iyengar, Aji Naraniengar M.A., B.L., M. A. Srinivasan, B.A., B. L., Dr. Srinivasiengar, Pandit M. D. Alasingrachariar of Madras, Tirupattur C. S. Ramanujam Chetty, Advocate Narasimhiengar, V. T. Tirunaraniengar, M. A., M. A. Venkatachar, B.A., B.L., Pandit N. Cheluviengar, Peshkar Nanjundiah, S. Subrahmanyachar of Mysore, Dharmapuri Gopalakrishna Iyengar, H. R. Rangaswamiengar, M.A., M. N. Singrachariar, B.A., B.L., Kode Venkatachariar and Salem Parthasarathy Iyengar.

After the reading of the report by the Honorary Secretary Rao Bahadur R. Narasimhachar M.A., prizes were distributed by the Chairman to the successful candidates in the Sabha examinations held at Melkote on the 19th, 20th and 21st April 1931, in the Sanskrit College under the superintendence of the Principal of the Sanskrit College and the Secretaries.

Of the 102 candidates that had sent up applications, 69 appeared for the examinations, of whom 52 were successful; one candidate passed in the Divya Prabandha Branch of the Higher Grade; 18 in the Intermediate Grade, 8 in the Divya Prabandha Branch and 10 in the Veda branch. 38 in the Lower Grade.—12 in the I year's subjects, 12 in the II year's subjects, 6 in the III Year's subjects, 2 in the IV Year's subjects and 1 in the V Year's subjects. The prizes ranged from Rs. 6 to Rs. 40 the total amount awarded to candidates being Rs. 741. Two teachers who trained the students for the Sabha examinations were also given honoraria of Rs. 30 and Rs. 25. Two prizes of the value of Rs. 25 each have been instituted in memory of the late President, Sriman S. Venkataranga Iyengar, and the late Assistant Secretary, Sriman M. K. Tirumalachariar, B.A. Books were also presented by Rao Bahadur V. Ranganatham Chettiar of Madras, Professor N. T. Narasimha Iyengar, B.A., and Mr. M. C. Krishnaswamy Iyengar.

After the prize-giving was over, interesting discourses were delivered by Vidwan S. Narasimhachariar of the Oriental Library and the Chairman. Other instructive lectures were also delivered in connection with the Sabha in the Melkote Sanskrit College on the 20th, 21st and 22nd April respectively by Vidwan Tiruamalai Ramanujachariar, Vidwan S. Tirunaraniengar and Vidwan Prativadibhayankaram Annangaracharlar of Kanchipuram.

This year Malleswaram, Bangalore, formed a centre for the Sabha examinations which were held on the 11th and 12th of April.

The proceedings were brought to a close with a vote of thanks to the Chair and prayers for the long life and prosperity of H.H. the Maharaja of Mysore.

R. NARASIMHACHAR,

Honorary Secretary.

Malleswaram, Bangalore,
26th April, 1931.

ஸ்ரீ:

ஶ்ரியை நம:

ஸம்பாதகீயம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

த்வைதாத்வைத வாதம்.

சற்றேறக்குறைய ஒரு மாஸகாலம் முன், கும்பகோணத்தில் த்வைத அத்வைத வாதமொன்று நடைபெற்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இரண்டு கக்ஷிகளிலும் சிறந்த வித்வான்கள் அநேகர் அப்பொழுது அவ்விடத்தில் சேர்ந்தார்கள். ஆனால், அந்த வாதம் நாலைந்து தினங்கள் மாத்ரம் நடைபெற்று, பிறகு எவ்வித பூர்த்தியையும் அடையாமலே நடுவில் விச்சின்னமாகப் போய்விட்டதென்று நாம் அறிகிறோம்.

இம்மாதிரி வாதமொன்று நடைபெறப் போகின்றதென்று முதல் முதலில் பத்ரிகாத்வாரா ப்ரசுரம் செய்யப்பட்ட பொழுதே நமது மநஸ்ஸில் சில அதி சங்கைகள் உதித்தன. 'என்ன ப்ரயோஜநத்தை உத்தேசித்து இதன் ப்ரவர்த்தகர்கள் இதை நடைபெறுவிக்கிறார்கள்? அந்த ப்ரயோஜநம் இப்பொழுது நமக்கு அவச்யம் அபேக்ஷிதம் தானோ? இந்த ப்ரயத்நம் நமக்கு அநிஷ்டமான அநர்த்தமொன்றையும் விளைவிக்காமல் இருக்குமோ?' இவ்விதம் பல ப்ரகாரமாக நாம் கலங்கி நின்றோம். எவ்விதமான கலக்கத்திற்கும் காரணமாகாமல், அது, பகவத் ஸங்கல்பத்தால் ஆரம்ப தசையிலேயே சாந்தமாகிவிட்டது என்பது நமக்கு ஆச்வாஸத்தை ஜநிப்பிக்கின்றது.

ஒவ்வொரு வ்யாபாரமும் காலதேசங்களுக்கு அநுகுணமாகவே பலங்களைக் கொடுக்கின்றது என்பது அநுபவ ஸித்தம். தத்வ நிர்ணயத்தை உத்தேசித்துச் செய்யப்படும் வாதங்களும் காலத்திற்கும் தேசத்திற்கும் ஒத்தபடியே தத்வ நிர்ணயத்திற்கு ஸாதகமாகவும் பாதகமாகவும் போவது உண்டு. இந்த விஷயத்தை, இந்த வாதத்தின் ப்ரவர்த்தகர்கள் நன்றாகப் பராமர்சிக்கவில்லை என்றே நமக்குத் தோன்றுகின்றது. இக்காலமானது அஹங்காரமும் ஆக்ரஹமும் தலையெடுத்து நிற்கும் காலம். பெரியோர்கள் சிறியோர்கள் என்னும் வரம்பின்றிக்கே, எல்லாரும் தம் தமக்குத் தோன்றுமவற்றையே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸாது வென்று நினைக்கிறார்கள். ஸ்வல்பம் படித்த

மாத்ரத்தாலேயே தமக்கு ஸர்வமும் தெரிந்துவிட்டதென்றும் மற்றவரெல்லாரும் தமக்கு நிஹீநர்களே யென்றும் ஒரு ஆந்த்யம் எவ்விடத்திலும் வ்யாபித்து நிற்கின்றது. அப்படி மூடர்களாய் இருப்பவர்களை நிர்பந்தித்துச் சரியான மார்க்கத்தில் திருப்பவோ, இல்லாவிட்டால் அவர்களை அநாதரித்து அந்த அநாதரத்தால் அவர்களுக்குச் சரியான புத்தியை ஜநிப்பிக்கவோ, எவ்வித பெரியோர்களும் அதிமாத்ரம் அசக்தர்களாயிருக்கும்படி ஸந்தர்ப்பங்களும் நேர்ந்திருக்கின்றன. பாச்சாத்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தாலும் கலியின் மஹிமையாலும், ஒருவன் தனது மனம்போன போக்கெல்லாம் நடந்து வருகையிலும், மஹா ஜநங்களிடமிருந்து எவ்வித பயமுமின்றிக்கே நிராபாதமாக வர்த்தித்து வரவும் தான்போகும் மார்க்கத்திலேயே ஸுகத்துடன் காலத்தைக் கழிக்கவும் சக்தனுகவே இருக்கிறுன். இப்படி அஸாத்விகர்களாயும் கேவல அர்த்த காம பரவசர்களாயுமுள்ள ஜநங்களின் நடுவில், ஸாதுக்களையும் சாந்தர்களையும் வைத்துக்கொண்டு நிர்வஹிக்கக்கூடிய தத்வ நிர்ணயத்தை நிர்ணயிக்க ப்ரயத்நப்படுவது புத்திமத் க்ருத்யமாகுமோ?

இரண்டாவது,நமக்கு இப்பொழுது ஸம்பவித்திருக்கும் துர்த்தசை இந்தத் தத்வ நிர்ணயத்தைத் தேடிப் போகக்கூடிய தசையாக இருக்கின்றதா? தத்வ நிர்ணயத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக நமது அவதாநத்தை அபேக்ஷிக்கும் ஸாமாந்ய தர்மங்களெல்லாம் ஆத்யந்திக லோபத்தை அடைந்து வருகின்றன. நமது சிறுவர்களெல்லாரும் ப்ராயேண நாஸ்திக மதத்தை அவலம்பித்தவர்களாய், மஹர்ஷிகளால் நமக்கு ச்ரேயஸ்கரமென்று விதிக்கப்பட்டுள்ள ஸதாசாரங்களெல்லாவற்றையும் கைவிட்டு, மிகவும் அஹிதங்களென்று வ்யக்தமாகப் புலப்படும் துராசாரங்களைக் கைப்பற்றி வருகிறுர்கள். இஷ்ட ப்ரகாரம் புஜிப்பதும் இஷ்ட ப்ரகாரம் வ்யாபரிப்பதும் ஸாமாந்ய அநுஷ்டாநமாக இருக்கின்றது. இன்னும் ஸ்வல்ப காலம் சென்றுல், இந்த அநுஷ்டாநம் மேலிட்டு தேசத்திற்கு மஹத்தான க்ஷோபத்தை விளைவிக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை.

“ஶௌத்ராசாராஶ்ச வர்ணாஶ்ச யோஷிதஶ்ச விஶாம்பதே ।
ஸ்நேஹாநம் ந ஸஹிஷ்யந்தி யுகாந்தே பர்யுபஸ்திதே ॥

என்று மஹர்ஷிகள் ஜ்ஞாந த்ருஷ்டியால் பார்த்துச் சொன்னதை இப்பொழுது நாம் நேரில் பார்க்கிறேம். இந்தத் துர்த்தசையில், இப்படிப்பட்ட ப்ரளயம் நேராமல் தடுக்கவும் எல்லை நிலங்களான தர்மாநுஷ்டாநங்களை ஸம்ரக்ஷிக்கவும் நமக்கு ப்ராப்தமாயிருக்க, நாம் ஸ்வல்ப அந்தச் சித்ரத்தில் பரஸ்பரம் கலகப்பட்டுக்கொண்டு அபிப்ராய பேதமடியாக வரும் விவாதங்களில் நமது முயற்சியைச் செலுத்துவது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ? இந்த வாதத்தில் ப்ரவ்ருத்தித்த பெரியோர்களெல்லாரும் தமது சக்தியையும் யோக்யதையையும் முயற்சியையும் தர்மாநுஷ்டாநத்தை ஸ்தாபிப்பதில் செலுத்தினுல், நமது தேசத்துக்கு அளவற்ற நன்மை ஸம்பவிக்குமன்றே? மநுஷ்ய

தர்மம் லோபத்தை அடையாமல் இருந்தாலன்றே முமுக்ஷு தர்மத்திற்கு ப்ரசாரமுண்டு?

மூன்றுவது, இந்த வாதம் விச்சிந்நமாகாமல் இன்னும் கொஞ்ச காலம் நடைபெற்றிருந்தால், பெரிய அநர்த்தத்தை விளைவித்திருக்குமென்றே நாம் பயப்படுகிறேம். ப்ராயேண இம்மாதிரியான வாதங்கள் மநுஷ்யர்களுக்குள் பரஸ்பரம் மைத்ரத்தை வ்ருத்தி செய்வதற்கு பதிலாகப் பரஸ்பரம் த்வேஷத்தையும் ஸ்பர்த்தையையும் ஜநிப்பிக்கின்றன. ஒருவனுல் அத்யந்தம் அபிமதமென்றும் ஹிதமென்றும் பஹுகாலமாகக் கொண்டாடப்பட்டுவரும் கொள்கையில் மற்றொருவன் தோஷத்தை உத்காடநம் செய்தால், அது அவர்களுக்குள் வைமநஸ்யத்தை ஜநிப்பியாமலும் இருக்குமோ? ஏற்கெனவே நாம் அநேக காரணங்களால் பரஸ்பரம் பத்த வைரர்களாய் பரஸ்பரம் த்வேஷித்து வருகின்றேம். அந்த த்வேஷத்தை வ்ருத்தி செய்யக்கூடிய இந்த வாதத்தை இப்பொழுது ப்ரவ்ருத்திப்பிக்க முயன்றதை அஸ்தாநத்தில் செய்யப்பட்ட முயற்சியென்றே நாம் நினைக்கிறேம்.

ஜநங்களுடைய ஆத்யந்திக ச்ரேயஸ்ஸை இச்சிக்கும் சக்தர்கள் மோக்ஷ சாஸ்த்ரத்தின் ப்ரசாரத்தில் முயலவேண்டியது அவச்யமே. ஆனுல், அந்த முயற்சி எவ்விதத்தில் நமக்கு ப்ரகாராந்தரங்களில் அநர்த்தாவஹமாகாமல் இருக்குமோ அவ்விதமாக அவர்கள் ப்ரவ்ருத்திக்க வேண்டும் என்பதுதான் நமது விண்ணப்பம்.

*　　*　　*　　*

நமது மதத்தின் தத்வம்.

நவீந ஸம்ப்ரதாயத்தையும் பரிபாடியையும் அநுஸரிக்கும் அநேகர்கள், இப்பொழுது, நமது சாஸ்த்ரங்களின் தாத்பர்யத்தை வேறு வேருக க்ரஹித்து அந்த க்ரஹணத்தை ஆதாரமாகக் கொண்டு நமது சாஸ்த்ரங்களைத் தூஷிக்கவும் பூஷிக்கவும் ப்ரவ்ருத்திக்கிறுர்கள். இப்படிச் செய்வதால் நமது சாஸ்த்ரங்களின் தாத்விகமான அர்த்தம் விப்லவத்தை அடைந்து விடுகின்றதாதலால் அந்த அந்யதா க்ரஹணத்தைத் திருத்தவும் உண்மையான அர்த்தத்தை வெளியிடவும் சாஸ்த்ர விச்வாஸிகளுடைய தர்மமாகின்றது.

ஸமீப காலத்தில் ஆதுநிக நிரூபகர்களுள் ஒருவர், நமது வேதாந்த சாஸ்த்ரம் ஜநங்களுக்கு அவச்யம் அபேக்ஷிதமான உத்ஸாஹ ஸம்பத்தையும் பௌருஷத்தையும் அநாதரித்துப் பேசுகின்றதென்றும், அப்படிப் பேசுகிறபடியால் அது சோம்பர்களுக்கு மிகவும் இடம் கொடுக்கின்றதென்றும், அந்தக் காரணங்களால் அந்தச் சாஸ்த்ரம் நம்மால் கைவிடத்தகுந்ததென்றும், சில வேதாந்த விஷயங்களை ஆதாரமாக எடுத்துக்கொண்டு உபபாதித்திருக்கிறுர். எப்பொழுதும் ஜ்ஞாந லவம் ஸாபாயம் என்பதற்கு இந்த உபபாதநம் நிதர்சநமாகின்றது. இன்னும் கொஞ்சம் அதிகமான ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொள்வதில் பரிச்ரமப்பட்டும் ஜ்ஞாந வ்ருத்தர்களை உபஸேவித்தும் இவர் இம்மாதிரியான விசா

ரத்தில் ப்ரவ்ருத்தித்திருந்தால் இம்மாதிரியான நிர்ணயத்தைச் செய்திருக்க மாட்டார் என்பது திண்ணம்.

இவருடைய உபபாதநத்தின் ஸங்க்ரஹமாவது—நமது வேதாந்தத்திற்கு அஸாதாரணமாயுள்ள கொள்கைகளுள் ஜந்மாந்தர கர்மத்தைப் பற்றிய கொள்கை மிகவும் முக்யமானது. அந்தக் கொள்கை ப்ரகாரம், நமக்கு இந்த ஜந்மத்தில் நேரும் இஷ்ட அநிஷ்ட ப்ராப்திகளெல்லாம் நாம் முந்திய ஜந்மங்களில் செய்திருக்கும் ஸத்கர்ம துஷ்கர்மங்களின் பலங்களே யாகின்றன. அந்தப் பலங்களையும் நாம், ஸர்வஜ்ஞனையும் ஸர்வசக்தனையும் இருக்கும் ஒரு ஈச்வரனிடமிருந்தே அவனுடைய ஸங்கல்பத்துக்கு ஒத்தபடியே பெறுகின்றோம். இவ்விதம் நமது சாஸ்த்ரம் போதிப்பதானது, நாம் நமது லாப நஷ்டங்களைக் குறித்து எவ்வித முயற்சியையும் செய்ய வேண்டாமென்றும் அப்படி நாம் ஏதாவது ஒரு முயற்சியைச் செய்தாலும் அது வீணே ஆகுமென்றும் சொல்வதற்கு ஸமமாகின்றதன்றோ? இப்படி ஜநங்களுக்குள் நிருத்ஸாஹத் தன்மையையும் நிர்வ்யாபாரமாயிருக்கும் ஸ்வபாவத்தையும் வற்புறுத்தும் இந்தச் சாஸ்த்ரத்தை நாம் ஆதரிப்பது எவ்விதத்தில் உசிதமாகும்? என்பது தான். உபஸம்ஹாரம் செய்யுமிடத்தில், அவர் தமது நிர்ணயத்தைப் பின் வருமாறு ஸங்க்ரஹித்திருக்கிறார்:—

Preachings of this sort only enjoin an attitude to life which conflicts wirh prudence, if it does not encourage a fatalism which must destroy men's moral strength.

இவருக்கு நாம் சொல்லும் ஸமாதாநம் ஒன்றே. தேஹ யாத்ரை கர்மாதீனையென்றும் பகவத் ஸங்கல்பமின்றி ஒன்றும் நடைபெற மாட்டாதென்றும் நமது வேதாந்தங்கள் உரைப்பது உண்மையே யாயினும், அப்படி உரைப்பதன் தாத்பர்யம், 'நாம் ஒன்றும் செய்யாமல் இருக்க ப்ராப்தம்' என்பதன்று; ஆனால், நமக்கு இஷ்ட அநிஷ்ட பலங்களைக் கொடுக்கும் விஷயத்தில் நம்மால் இப்பொழுது செய்யப்படும் முயற்சிகள் மாத்ரம் ஹேதுக்களல்ல வென்பதையும், நாம் அதிமாத்ரம் அல்ப புத்தியையும் அல்ப சக்தியையும் உடையவராகையால் நம்முடைய புத்திக்கு எட்டாமலும் நம்முடைய சக்தியால் ஸாத்யமில்லாமலும் இருக்கும் பல விஷயங்கள் இந்த ப்ரபஞ்சத்தில் நடைபெறுகின்றன வென்பதையும், அவை யெல்லாவற்றையும் கசடற அறியக்கூடும் ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் முதலிய குணங்களை உடைத்தாயிருக்கும் ஈச்வரன் ஒருவனே ஸகலத்தையும் நடத்தி வருகிறானென்பதையும், ஆகையால் நாம் நம்முடைய தர்மத்துக்கும் சக்திக்கும் ஒத்தவையான முயற்சிகளைச் செய்த பிறகு அம்முயற்சிகளின் பலங்களைப்பற்றி நாம் எவ்வித விசாரமும் இன்றிக்கே ஈச்வரனுடைய கை பார்த்து நிற்பதே நமக்கு ஸகல ப்ரகாரங்களிலும் ச்ரேயஸ்கரமாகுமென்பதையும் நமக்கு வற்புறுத்துவதையே இந்தக் கொள்கை தாத்பர்யமாகக் கொண்டிருக்கின்றது. இப்படி தாத்பர்யத்தைக் கொள்ளாமல், நமது பூர்வபக்ஷி சொல்வது போல தாத்பர்யத்தைக் கொண்டால், அநேகவிதமான

அநுபபத்திகள் ப்ரஸங்கிக்கும். முதலில் போஜநாதி வ்யாபாரங்களும் தவற வேண்டிவரும்; இரண்டாவது,

"ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்"

"நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:"

இத்யாதியான கணக்கற்ற சாஸ்த்ராந்தரங்களுடைய உபதேசமெல்லாம் விரோதிக்கும். அப்படி பூர்வாபர விருத்தமாயும் எல்லாராலும் பரிஹஸிக்கப் படத் தகுந்ததாயுமுள்ள உபதேசங்களை அநேக மஹர்ஷிகளாலும் இன்னும் மற்றை பெரியோர்களாலும் கொண்டாடப்பட்டு வந்திருக்கும் ஒரு பெரிய சாஸ்த்ரம் உபதேசிக்க ப்ரவ்ருத்திக்க மாட்டுமோ?

உண்மை என்னவென்றால்—ஸர்வஜ்ஞனையும் ஸர்வசக்தனையும் இந்த ப்ரபஞ்சம் முழுவதற்கும் காரணமாயும் ஸகல நற்குணங்களுக்கும் பூர்ணமான இருப்பிடமாயுமுள்ள ஸர்வேச்வரன் ஒருவன் உண்டு. நாமெல்லாரும் அவனுக்கு அதிமாத்ரம் பரதந்த்ரர்கள்; அவனுக்கு ஸர்வப்ரகாரத்திலும் அடிமைப் பட்டவர்கள். அவன் நம்முடைய ச்ரேயஸ்ஸை உத்தேசித்து நமக்கு ஒருவித ஸ்வாதந்த்ர்யத்தைக் கொடுத்து 'இதைச் செய்; இதைச் செய்யாதே' என்று பல விதி நிஷேதங்களை சாஸ்த்ர மூலமாக ப்ரவ்ருத்திப்பித்திருக்கிறான். அந்த விதி நிஷேதங்களுக்கு ஒத்து நடக்குமவர்களை அநுக்ரஹிக்க வேண்டுமென்பதும், அவைகளைக் கடந்து நடக்குமவர்களை நிக்ரஹிக்க வேண்டுமென்பதும் அவனுடைய ஸங்கல்பம். ஆகையால் நமக்கு நன்மைகளோ தீமைகளோ எவை ஸம்பவித்தபோதிலும் அவையெல்லாவற்றையும் அந்த ஸர்வேச்வரனால் நம்முடைய நடத்தைக்கு அநுகுணமாகக் கொடுக்கப்பட்ட அநுக்ரஹ நிக்ரஹ ரூபங்களான பலங்களென்று உணர்ந்து, அநுக்ரஹ காலங்களில் ப்ரஹர்ஷத்தை அடையாமலும் நிக்ரஹ காலங்களில் நிர்வேதத்தை அடையாமலும், வேறு ரக்ஷகனைத் தேடிப்போகாமலும், சாந்தமான மநஸ்ஸுடன் நாம் நமது தர்மங்களை யதா சக்தி யதாஜ்ஞாநம் அநுஷ்டித்து வருவதே நமக்கு ப்ராப்தம். இதைத்தான் நமது சாஸ்த்ரம் உபதேசிக்கின்றது. எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளும்பொழுது, ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த முதலிகளுடைய ஆர்த்தியைக்கண்டு அவர்களுக்கு அவர் ஸங்க்ரஹமாக அருளிச்செய்த உபதேசமும் இதுவே. "ஆத்ம யாத்ரை பகவததீனையாகையாலே அதில் நமக்கு அந்வயமில்லை; தேஹ யாத்ரை கர்மாதீனையாகையாலே அதற்குக் கரையவேண்டா." தேஹ யாத்ரையைப்பற்றி கரைய வேண்டா வென்று மாத்ரம் அநுக்ரஹித்தாரே ஒழிய, தேஹ யாத்ரையைப்பற்றி எவ்வித முயற்சியையும் செய்ய வேண்டாவென்று அநுக்ரஹிக்கவில்லை.

"உத்பத்திஸ்திதிஸம்ஹாரா ஹ்யுதாஸீநா ஜகத்பதே"

[ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மூன்றும் பகவானுடைய வ்யாபாரங்கள். ஸ்ருஷ்டியிலும் ஸம்ஹாரத்திலும் நமக்கு அந்வயம் இல்லாததை நாம் உணர்வது போல, ஸ்திதியாகிற ஸம்ரக்ஷணத்திலும் நாம் சிந்தை யற்றே

இருத்தல்வேண்டும்] என்று நாம் சிந்தையற்று இருப்பதையே சாஸ்த்ரம் வற்புறுத்துகின்றது. நாம் செய்ய வேண்டுவதை வஞ்சனை இன்றிக்குச் செய்துவிட்டு பலங்களைப்பற்றி கரையாமல் ஈச்வரனையே நாம் நம்பி யிருக்கவேண்டும். ஈச்வரன் ஜகத்திற்கு நிருபாதிக பிதா.

"ஸவெ்ஷாஶெவ ஸொகாநாம் பிதா மாதா ச மாயவ:"

அவன் ஒவ்வொரு வஸ்துவையும், அது எவ்வளவு அல்பமேயாயினும் பூர்ணமாகக் கவனித்து வருகிறான். நாம் நம்முடைய தாயார்களின் கர்ப்பத்தில் வஸித்து வந்தபொழுது நம்மை ஆதரித்து ரக்ஷித்து வந்தவன், நம்மை இப்பொழுது கைவிட மாட்டானன்றே? இதை நாம் உணராமல் நாம் நமக்குக் கிடைக்கும் பலங்களின் விஷயமாக சித்த விக்ஷேபத்தை அடையும் பக்ஷத்தில், நாஸ்திகர்களாக நம்மை நாம் செய்து கொள்வதுடன்கூட, வீணில் நம்மை நாம் வருத்தித்தும் கொள்ளுகிறோம்.

Be not anxious for the morrow. Have a free heart; be courageous and active; accept your life every day fresh from God's hand and trust in Him. Such composure of mind is not only not a hindrance, but is even an inexhaustible source of strength for a successful struggle for existence.

* * * * *

ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தக ஸபை

மைஸூரில் சென்ற முப்பது வர்ஷகாலமாக, "ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தக ஸபை" என்னும் பெயருடன் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸபை நடை பெற்று வருகின்றது. நிகழும் சித்திரைமீ 10உ வியாழக்கிழமை தினம் இச் சபையின் முப்பதாவது வார்ஷிக மஹா ஸங்கம் மிக்க சிறப்புடன் நடந்ததாம். அதன் விவரத்தை அதன் கார்யதர்சி இங்க்லீஷ் பாஷையில் எழுதி அனுப்பி இருக்கிறார். மற்றோரிடத்தில் அது ப்ரசுரம் செய்யப்பட்டிருப்பதை நமது ஸஹ்ருத்துக்கள் பார்க்கலாம். அந்தச் சபையை ப்ரவ்ருத்திப்பிப்பவர்களிடம் அமைந்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ சமயப் பற்றை நாம் மிக்க ஆநந்தத்துடன் பாராட்டுகிறோம். இவர்களுடைய அறிவும் ஆற்றலும் வளர்ந்தோங்குமாறு எம்பெருமான் திருவருள் புரிக.

ஹ்ராம் விரோயெத । வாக்யஶெஷெ ப்ரதீமாணயொமெந ஶிவஶப்தாபிதெயத்வம் "ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" இத்யாதிநா ஜ்ஞாதமெவ । வாக்யஶெஷ ஏவ ஶிவஶப்தாபிதெய இத்யநஞ்ஞாதமெவ வததி "மஹாந் ப்ரபு ர்வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" இதி ॥

உக்தைரேவ ந்யாயை: "ந ஸந் நசாஸச்சிவ ஏவ கேவல:"

புருஷ வேதநத்தின் அம்ருதத்வ ஹேதுத்வமும் மற்றை ஒன்றும் அம்ருதத்வத்துக்கு மார்க்கமாகாமல் இருப்பதும் காரண புரஸ்ஸரமாக உபஸம்ஹாரம் செய்யப்பட்டதாகும். வேறு விதமாக அர்த்தம் சொல்லும் பக்ஷத்தில், ஆரம்பத்தில் செய்யப்பட்டுள்ள இரண்டு ப்ரதிஜ்ஞைகளும் விரோதிக்கப்படும். இந்தப் புருஷதத்வம் எப்பொழுதும் எவ்வித அசுத்தமுமற்று பரிசுத்தமாகவே இருக்கிற தத்வமானதால், இது 'ஶிவ' என்னும் சப்தத்தால் வ்யவஹரிக்கத் தகுந்தது. "ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" என்பதில் இந்த வ்யவஹாரத்தைக் காணலாம். தவிரவும், அடுத்துவரும் வாக்யமாகிற "மஹாந் ப்ரபுர்வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" என்பதில் இந்தப் புருஷனே 'ஶிவ' சப்தத்தால் சொல்லப்படுகிறான் என்பது வ்யக்தமாகத் தெரிகின்றது.

உக்தைரேவ ந்யாயை:—"ந ஸந் நசாஸச்சிவ ஏவ கேவல:" இத்யாதி

வாக்யஶெஷ்—"ஸர்வாநநஶிரோக்ரீவ:" இத்யாதியான வாக்யத்தில் "தஸ்மாத் ஸர்வகத: ஶிவ:" என்று 'ஶிவ' சப்தம் ப்ரயோகமாகி இருக்கின்றதே என்றால், அந்த 'ஶிவ' சப்தம் ஶம்புவையே குறிக்கவேண்டுமென்னும் நிர்பந்தமில்லை என்கிறார். 'ஶிவ:' என்னும் சப்தத்திற்கு 'அசுத்தியற்ற' 'சுத்தமான' என்னும் பொருள் உண்டு. "ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" என்னும் வாக்யத்தில் அம்மாதிரி ப்ரயோகம் காணப்படுகின்றது. "ஸ்தாணு: ஶிவ: ஶிவ: ஸ்தாணு:" என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும் இந்த ப்ரயோகத்தைக் காணலாம். ஆகையால் உபக்ரமத்தில் காணப்படும் ப்ரதிஜ்ஞைக்கு ஒற்று செய்யப்படும் அர்த்தத்திற்கு இந்த 'ஶிவ' சப்த ப்ரயோகம் பாதகமாகமாட்டாது.

வாக்யஶெஷ ஏவ—தவிரவும், அடுத்து வரும் வாக்யத்தில், 'இந்த ஶிவ சப்தம் ப்ரக்ருத புருஷ தத்வத்தையே குறிக்கின்றது' என்று வ்யக்தமாகச் சொல்லப்படுகின்றது. "ஏஷ ஸத்வஸ்ய ப்ரவர்த்தக:" என்பதிலுள்ள 'ஏஷ' [இவன்] என்னும் சப்தம், கீழில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'ஶிவ' சப்தத்தால் சொல்லப்படுமவனையே ப்ரத்யபிஜ்ஞாபிக்கின்றதன்றோ?

உக்தைரேவ ந்யாயை:—"ந ஸந் நசாஸச்சிவ ஏவ கேவல:" என்பது பூர்வபக்ஷியால் கூறப்பட்டுள்ள வாக்யங்களுள் நாலாவது வாக்யம். இந்த வாக்யத்திலும் 'ஶிவ' சப்தம் காணப்படுகின்றதே என்றால், 'கீழில் விளக்கப்பட்டுள்ள ந்யாயப்படி இந்த வாக்யமும் நாராயணபரமே' என்று ஸமாதானம் சொல்லப்படுகின்றது. கீழில் விவரிக்கப்பட்டுள்ள ந்யாயங்களான—(1) காரண வாக்யங்களெல்லாம் நாராயணனுக்கே பரமகாரணத்வத்தை ப்ரதிபாதிக்கின்றன; (2) அநந்ய பரங்களான நாராயண

உதாஹ்ருதி ஸவு௦ நெயழ ॥

கி௦ஆ, "அ௦ஹஸ்யவாரெ" உதஹ்ருவாகெ "ந தஸெஶ்ஶெ கஶ்ஶ ந" உதி நிரஸ்தஸஉாஹுயிகஸ௦ஹாவநஸ்ய வ-ஷஸ்ய, 'அணொரணீயாந்'

வாக்யங்களும் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ந்யாயப்படி நாராயண பரங்களென்றே அர்த்தம் செய்யப்படவேண்டும்.

கி௦ஆ.........தவிரவும், மற்றும் ஒரு அம்சம் இவ்விடத்தில் அவதேயம். அது என்னவென்றால் :—"**அ௦ஹஸ்ய வாரெ**" என்னும் அநுவாகத்தில் "**ந தஸெஶ்ஶெ கஶ்ஶ ந**" [அவனுக்கு ஈச்வரன் ஒருவனும் இல்லை] என்னும் வாக்யமும், அதற்குப் பிறகு "**அணொரணீயாந்**" என்னும் அநுவாகத்தில் "**ஊஹர௦ விவாஸ்௦ ....தஷ-வாவிதவஸ்ழ**", "**யவெஷாஷள**" என்னும் வாக்யங்களும் காணப்படுகின்றன. இவைகளுள் முதல் வாக்யத்தால் சொல்லப்படும், எவ்வித ஒப்பு உயர்வுமற்றிருக்கும் புருஷனே, "**யவெஷாஷள**" இத்யாதியான வாக்யத்தால் மஹேச்வர

அநுவாகாதிகளால் அந்த நாராயணனுக்கே ஸர்வத்தையும் காட்டிலும் பரத்வம் நிச்சயிக்கப் படுகின்றது; (3) ப்ரஹ்மா ருத்ரன் முதலானவர்கள் அந்த நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்களென்றும் ஸம்ஹரிக்கப்படுகிறார்களென்றும் ச்ருதிகள் சொல்லுகின்றன; (4) '**ஶிவ**' '**ஈஶ்வர**' முதலிய சப்தங்கள் ருத்ரனைக் குறிக்காமல் வேறு அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறபடியால், அவைகளை இவ்விடத்தில் ஸாதாரண சப்தங்களாகவே எடுத்துக் கொள்ளக்கூடும் என்பதுமே. இம்மாதிரியான ந்யாயங்களைக் கொண்டு, '**ஶிவ**' முதலிய சப்தங்களெல்லாம், 'ஸத்' 'ப்ரஹ்ம' முதலிய சப்தங்கள் போல நாராயணனிடத்திலேயே பர்யவஸிக்கின்றன என்பதை நிர்ணயிக்கக்கூடும்.

கி௦ஆ......"**யவெஷாஷள ஸ்வர: வெரக்த:**......" என்னும் வாக்யம் நாராயணனைப் பற்றி பேசுகிறதே தவிர, அவனைக்காட்டிலும் வேறுபட்ட வஸ்து ஒன்றையும் பற்றிப் பேசவில்லை என்பது, இந்த வாக்யத்திற்கு முன்னும் பின்னும் காணப்படும் வாக்யங்களைப் பார்த்தாலேயே விளங்கும் என்னும் விஷயத்தை இப்பொழுது உபபாதிக்கிறார். சில விடங்களில் சில வாக்யங்களுக்கு நாராயண பரத்வம் வேறு ப்ரகரணங்களில் காணப்படும் வாக்யங்களைக்கொண்டே நிர்ணயிப்பதுண்டு; இந்த வாக்யத்திற்கு நாராயண பரத்வத்தை நிர்ணயிக்கும் பொருட்டு வேறு ப்ரகரணங்களில் காணப்படும் வாக்யங்களை நாம் தேடிப் போகவேண்டுவதில்லை என்பதே ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளம். முதல் அநுவாகத்தில் காணப்படும் "**ந தஸெஶ்ஶெ கஶ்ஶ ந**" என்னும் வாக்யத்தை இவ்விடத்தில் எடுப்பதன் தாத்பர்யம், கீழ் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள புருஷனைக் காட்டிலும் வேறு ஒரு வஸ்துவுக்கு மேன்மை சொல்வது "**ந தஸெஶ்ஶெ கஶ்ஶ ந**" [அவனுக்கு வேறு ஒரு ஈச்வரனும் இல்லை] என்று செய்யப்பட்டுள்ள நிஷேதத்திற்கு விருத்தம் என்பதைக் காண்பிக்கும் பொருட்டே.

உதஹ்ஸ்ஹிஹந-வாகெ வெஷாஷஹ்ஸர-வெதயா வெஷஸீஜஹ-தவ்ரணவஸ்ய வ்ரக்ருதிஹ-தாகாரவாஅஹ்தயா ஈஹெஶ்வரக்ஷ௦ வ்ரதிவாஷ்ய, ஊஹரவ-ண்டரீககயஸ்ஹாகாஶாந்தரவதி-தயா உவாஸ்யக்ஷ-க்தழ । அயஈஶ-ஃ--ஸவ-ஸ்ய வெஷஜாதஸ்ய வ்ரக்ருதி: வ்ரணவ உக்த: ; வ்ரணவஸ்ய அ வ்ரக்ருதிர காஈ: ; வ்ரணவவிகாரொ வெஷ: ஸ்வப்ரக்ருதிஹ-தெ வ்ரணவெ ஸீந: ; அகாரவிகாரஹ-த: வ்ரணவொ ஈவி ஸ்வப்ரக்ருதாவகாரெ ஸீந: ; தஸ்ய வ்ரணவ

னென்று ப்ரதிபாதிக்கப்பட்டு, "**ஊஹர௦ விவாஸ்௦**" என்னும் வாக்யத்தால் தஹர புண்டரீகத்தின் மத்யத்தில் இருக்கும் ஆகாசத்தினுள்ளில் இருப்பவனாக உபாஸிக்கத் தகுந்தவனென்று சொல்லப்படுகிறான். "**யவெஷாஷள**" என்னும் வாக்யத்தில், மஹேச்வரத் தன்மையை ப்ரதிபாதிக்குமிடத்தில், 'வேதங்களெல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமுமாக இருந்து கொண்டு அந்தக்காரணத்தால் அவைகளுக்கு விதைபோன்றிருக்கும் ப்ரணவம் என்பது யாதொன்று உண்டோ, அந்த ப்ரணவத்துக்கு விதையாக இருக்கும் 'அ' என்னும் எழுத்தால் சொல்லப்படுமவனே மஹேச்வரன்' என்றன்றோ சொல்லப்பட்டிருக்கின்றது? இதன் கருத்து என்னவென்றால் :—'எல்லா வேதங்களுக்கும் ப்ரக்ருதியாக இருக்கின்றது ப்ரணவம்; அந்த ப்ரணவத்

வெஷாஷஹ்ஸர-வெதயா—இவ்விடத்தில் "**யவெஷாஷள**" இத்யாதியான வாக்யத்தின் அர்த்தம் சொல்லப்படுகின்றது. இந்த வாக்யத்தில் '**ஸ்வர:**' என்பதற்கு 'ப்ரணவம்' என்பது பொருள். வேதத்திற்கு ப்ரணவம் உத்பாதகமாகையாலும் லய ஸ்தாநமாகையாலும், அது வேதத்தின் ஆதியிலும் அந்தத்திலும் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. "**ப்ராஹ்மண: ப்ரணவம் கு-யாஷாஷாவஷெ அ ஸ்வ-ஷா**" என்பது மநு வாக்யம். ஆகையால், ப்ரணவம் வேதத்திற்கு பீஜம். அந்த ப்ரணவத்திற்கு 'அ' என்னும் எழுத்து பீஜம்; 'அ' என்பது ஸமஸ்த சப்தங்களுக்கும் மூலமன்றோ? 'லீநம்' என்பதற்கு 'அந்த ரூபத்தை அடைந்திருக்கிற' என்பது பொருள். அந்த 'அ' என்பதற்கு **ய: வர:**—அந்த 'அ' என்னும் எழுத்தால் எவன் ப்ரதிபாதிக்கப் படுகிறானோ. "**வர:**" என்பதற்கு 'ப்ரதிபாதிக்கப்படும்' என்பது பொருள். இதற்கு 'உத்க்ருஷ்டன்' என்னும் பொருளும் உண்டு. அது இவ்விடத்தில் விவக்ஷிதமன்று. 'அ' என்பதால் ப்ரதிபாதிக்கப்படுமவன் விஷ்ணுவே என்பது "**அகாரொ-ணொஅஹ்தெ விஷ்ணு-ஸ்வ-ஹெொகெஶ்வரொ ஹரி:**" "**அகாரொ விஷ்ணு-வாஅக:**" என்னும் ச்ருதி ஸ்ம்ருதிகளால் விளங்கும்.

ஊஹர வ-ண்டரீக......"**ஊஹர௦ விவாஸ்௦**" இத்யாதியான வாக்யம் முதலில்; அதற்குப் பிறகு "**யவெஷாஷள**" இத்யாதியான வாக்யம். தஹர புண்டரீகத்தின் மத்யத்திலுள்ள ஆகாசத்தில் இருப்பதாக உபாஸிக்கப்படவேண்டும் என்று முதல் வாக்யத்தில் சொல்லப்படுகின்றது. யார் அப்படி உபாஸிக்கப்படத்தகுந்தவன் என்றால், அவன் நாராயணனாகிற மஹேச்வரனே என்று இரண்டாவது வாக்யம் சொல்லுகின்றது.

ப்ரக்ருதிபூதஸ்யாகாரஸ்ய ய: பர: வாச்ய: ஸ மஹேச்வர இதி । ஸர்வவாசகஜாதப்ரக்ருதிபூதாகாரவாச்ய: ஸர்வவாச்யஜாதப்ரக்ருதிபூதநாராயணோ ய: ஸ மஹேச்வர இத்யர்த்த: । யதோக்தம் பகவதா ।

"அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா ।
மத்த: பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய" ॥ [ப. கீ. 7—6,7.]
"அக்ஷராணாமகாரோ஽ஸ்மி"...............[ப. கீ. 10—33.]

இதி । 'அ இதி ப்ரஹ்ம' இதி ச்ருதே: நாராயணஸ்ய அகார வாச்யத்வம், "அகாரோ வை ஸர்வா வாக்" இதி வாசகஜாதஸ்ய அகார ப்ரக்ருதித்வம்

திற்கு ப்ரக்ருதியாக இருப்பது 'அ' என்னும் எழுத்து. இப்படி ப்ரணவத்தின் விக்ருதியாக இருக்கும் வேதம், தனது ப்ரக்ருதியாயுள்ள ப்ரணவ ரூபத்தை அடைந்திருக்கின்றது; 'அ' என்னும் எழுத்தின் விக்ருதியாக இருக்கும் ப்ரணவம், தனது ப்ரக்ருதியாயுள்ள 'அ' என்னும் எழுத்தின் ரூபத்தை அடைந்திருக்கின்றது; அப்படிப்பட்ட ப்ரணவ ப்ரக்ருதியாயுள்ள 'அ' என்பதால் சொல்லப்படத் தகுந்தவனே மஹேச்வரன்' என்பதுதான். 'அ' என்னும் எழுத்து, ஸகல சொல்களுக்கும் மூலம்; நாராயணன், சொல்களால் குறிக்கப்படும் வஸ்துக்க ளெல்லாவற்றுக்கும்

ஸர்வவாசக..... "யவேதாதௌ" என்னும் வாக்யத்தில் காணப்படும் வசன வ்யக்தியின் அபிப்ராயம் வெளியிடப்படுகின்றது. 'அ' என்பதற்கு எவன் வாச்யனோ அவன் மஹேச்வரன் என்று சொன்னால் போதுமாக இருக்கையில், '**தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய: ய: பர:**' [ப்ரணவத்தின் ப்ரக்ருதியாகிற அவஸ்தையை அடைந்திருக்கும் 'அ' என்பதற்கு எவன் வாச்யனோ] என்று சுற்றிச் சொல்வானேன் என்றால், 'நாராயணன், சொல்களால் ப்ரதிபாதிக்கப்படும் வஸ்துக்களெல்லாவற்றுக்கும் மூலம்; 'அ' என்பது சொல்களெல்லாவற்றுக்கும் மூலம்; சொல்களால் குறிக்கப்படும் வஸ்துக்க ளெல்லாவற்றுக்கும் மூலமாயிருக்குமவன், சொல்க ளெல்லாவற்றுக்கும் மூலமாயிருப்பதால் ப்ரதிபாதிக்கப்படத்தகுந்தவன் என்பதை ஜ்ஞாபிக்கும் பொருட்டே' என்று விளக்குகிறார்.

அஹம் க்ருத்ஸ்னஸ்ய......நாராயணன், சொல்களால் குறிக்கப்படும் வஸ்துக்க ளெல்லாவற்றுக்கும் மூல பூதன் என்பதையும், 'அ' என்பது சொல்க ளெல்லாவற்றுக்கும் பீஜமென்பதையும் இந்த வாக்யம் விளக்குகின்றது. "**அக்ஷராணாமகாரோ஽ஸ்மி**" என்பது, இந்த வாச்யம் வாசகம் இரண்டுக்குமுள்ள ஸம்பந்தத்தை விளக்குகின்றது. இவைகளுக்கு ச்ருதி வாக்யங்களும் ப்ரமாணங்களாகச் சொல்லப்படுகின்றன.

ததைவ......"யவேதாதௌ" என்னும் வாக்யத்தில் காணப்படும் 'மஹேச்வரன்' என்னும் சப்தம் ஸாமாந்ய சப்தமாக இருந்த போதிலும், ப்ரகரணத்தைப் பார்க்கும் பொழுது அது நாராயண பரமே என்று விளக்கப்பட்டது. இப்பொழுது, இதற்கு அடுத்து வரும் அநுவாகத்தில், இந்த நாராயண பரத்வம் தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றது என்பதை விளக்குகிறார்.

ச ஜ்ஞாயதே; வாச்யஜாதஸ்ய ப்ரஹ்மப்ரக்ருதித்வம் ச ஸர்வேஷாம் । அதோ ப்ரஹ்மண: அகாரவாச்யதா ப்ரதிபாதநாத் அகாரவாச்யோ நாராயண ஏவ மஹேச்வர இதி ஸித்தம் । ததைவ "ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்" இதி கேவலபரதத்வவிசேஷப்ரதிபாதநபரேண நாராயணாநுவாகேந ஸர்வஸ்மாத் பரத்வம் ப்ரதிபாதிதம் । அதோ நாராயணாநுவாகேந ப்ரதி-

---

மூலம்: அந்த நாராயணனே மஹேச்வரன்'. இதுவன்றோ இந்த வாக்யத்தின் கருத்து? ஸ்ரீபகவானும் இந்த அர்த்தத்தை, "அஹம் க்ருத்ஸ்னஸ்ய" "அக்ஷராணாம்" இத்யாதியான ச்லோகங்களால் வெளியிட்டிருக்கிறான். வேதத்திலும், "அ இதி ப்ரஹ்ம" என்னும் வாக்யத்திலிருந்து, 'நாராயணன், 'அ' என்னும் சொல்லால் சொல்லப்படுகிறான்' என்பதும், "அகாரோ வை ஸர்வா வாக்" என்னும் வாக்யத்திலிருந்து, 'சொல்களெல்லாவற்றுக்கும் 'அ' என்னும் எழுத்தே மூலம்' என்பதும் விளங்குகின்றன. சொல்களால் சொல்லப்படும் வஸ்துக்க ளெல்லாவற்றுக்கும் ப்ரஹ்மமே மூலம் என்பது ஸ்பஷ்டமே. இப்படி 'அ' என்னும் சொல்லுக்கு ப்ரஹ்மமே குறிப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த 'அ' என்னும் சொல்லால் சொல்லப்படும் நாராயணனே மஹேச்வரன் என்பது ஸித்தமாகின்றது.
எது பரதத்வம் என்பதை ப்ரதிபாதிப்பதையே நோக்காக உடைய "ஸஹஸ்ரசீ-

கேவலபரதத்வவிசேஷப்ரதிபாதநபரேண—இந்த நாராயணாநுவாகம், 'பரதத்வம் சில விடங்களில் ஆத்மா வென்றும், சில விடங்களில் ஜ்யோதிஸ் என்றும் இம்மாதிரி பல விடங்களில் பல விதமாகச் சொல்லப்படுகின்றதே! இவைகளுள் எது பரதத்வம்?' என்பதை நிர்ணயிப்பதற்காகவே ப்ரவ்ருத்தம். 'ஆத்மா' 'ஜ்யோதிஸ்' இத்யாதியான சப்தங்களால் சொல்லப்படுமவன் நாராயணனே என்னும் விஷயம் [**நாராயண பரம் ப்ரஹ்ம, நாராயண பரோ ஜ்யோதி:**] என்பது முதலான வாக்யங்களால் விளங்குகிறதன்றோ? இது தான் இந்த அநுவாகத்தின் பெருமை.

அதேந......"**விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:**" [ருத்ரன் மஹர்ஷி; அவன் விச்வமெல்லாவற்றுக்கும் உத்க்ருஷ்டன்] என்றும், "**ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத**" [சதுர்முக ப்ரஹ்மா ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தான்] என்றும் இவ்வாறு அநேக காரண வாக்யங்கள், சிவன் முதலானவர்களுக்குக் காரணத்வத்தைச் சொல்பனவாகக் காணப்படுகின்றனவே! என்று சங்கித்து, அந்தச் சங்கைக்கு ஸமாதானத்தை அநுக்ரஹிக்கிறார். வாக்யங்களுள் சில அந்ய பரங்கள், சில அநந்ய பரங்கள்; நாராயணாநுவாகத்திற்கு நாராயணனைத் தவிர்த்து வேறு ஒன்றையும் ப்ரதிபாத்யமாகச் சொல்வது ஸாத்யமில்லை. "**நாராயணம் மஹாஜ்ஞேயம் விச்வாத்மானம் பராயணம்**" "**நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:**" "**யச்ச கிஞ்சித் ஜகத்ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபி வா । அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:**" இத்யாதியாக 'நாராயணனே பர தேவதை' என்று கண்டோக்தமாக இதில் சொல்லப்பட் டிருக்கிறபடியால், இது அநந்ய பரமே. இப்படி அநந்ய பரங்களாயுள்ள வாக்யங்களுக்கும் வேறு அந்ய பரங்களாயுள்ள வாக்யங்களுக்கும் பரஸ்பரம் விரோதம் வரும்பொழுது, அநந்யபர வாக்யங்களுக்கு அநுகுணமாகவே அந்ய பரவாக்யங்களை நயிப்பிக்க வேண்டும் என்பது ஒரு ந்யாயம். அந்த ந்யாயத்தை அநுஸரித்து இவ்விடத்தில் ஸமாதானம் சொல்லப்படுகின்றது.

பாதிதம் பரதத்வமேவ அந்யபரேஷு ஸர்வவாக்யேஷு கேநாபி ஶப்தேந ப்ரதீயமாநம் ததேவேத்யவகம்யத இதி "ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்" [ப்ர. ஸூ. 1—31] இதி ஸூத்ரகாரேண நிர்ணீதம் । ததேதத்ஸர்வம் ப்ரஹ்ம ஶ்ருதிஷு ப்ரஹ்மஶிவாதிஶப்தவாச்யமஸ்தீதி கேவலயோ: ப்ரஹ்மஶிவயோ: ந பரத்வப்ரஸங்க:, அஸ்மிந்நநுவாகே அந-

---

ஷ்டம்" இத்யாதியான நாராயணாநுவாகமும், அந்த நாராயணனே எல்லாருக்கும் பரன் என்பதை நன்றாக விளக்குகின்றது. ஜகத்தின் காரணம் யாது என்பதை ப்ரதிபாதிக்கும் சிற்சில வேத வாக்யங்களில் வேறு வேறு பெயர்கள் ப்ரயோகம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தந்த வாக்யங்களெல்லாம் அந்ய பரங்களாகையால், அநந்ய பரமான இந்த நாராயணாநுவாகத்தில் ப்ரதிபாதிக்கப்படுமதுவே பரதத்வமாக இருத்தல் வேண்டும் என்னும் விஷயம் "ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா து" இத்யாதியான ஸூத்ரத்தில் ஸூத்ரகாரரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ப்ரஹ்மா' 'சிவன்' போன்ற வேறு பெயர்களின் ப்ரயோகம் செய்யப்பட்டு, அவைகளால் பரப்ரஹ்மம் சில ச்ருதி வாக்யங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது என்பதால் மாத்ரம், 'அந்த ப்ரஹ்மா முதலானவர்களே பரப்ரஹ்மம் என்பதுதான் ச்ருதியின் தாத்பர்யம்' என்று நிர்ணயிக்கப்

ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா........கௌஷீதகீ ப்ராஹ்மணம் என்னும் உபநிஷத்தில், ப்ரதர்த்தநன் என்னும் ஒருவன் ஒரு காலத்தில் இந்த்ரனுடைய ஸ்தாநத்துக்குப்போய், 'மநுஷ்யர்களுக்கு எது அத்யந்தம் ஹிதமோ, அதை எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்று கேட்டதாகவும், அப்பொழுது 'என்னையே நீ உபாஸ்தி செய்' என்று இந்த்ரன் அவனுக்கு உபதேசித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் அர்த்தத்தை ஸூத்ரகாரர் விசாரித்து, இவ்விடத்தில் இந்த்ரன், தன்னையே உபாஸிப்பதுதான் ஹிததமம் என்று சொல்லும்பொழுது, 'தான்' என்னும் சப்தத்தால் தனது அந்தர்யாமியாயுள்ள பரமாத்மாவையே நிர்த்தேசித்தான் என்றும், அப்படி நிர்த்தேசித்துப் பேசுவது சாஸ்த்ரஜ்ஞர்களுக்கு வழக்கமென்றும் நிர்ணயித்திருக்கிறார். அந்த ஸந்தர்ப்பத்தில் இந்த ஸூத்ரம் காணப்படுகின்றது. ஸூத்ரத்தின் அர்த்தம்—உபதேஶ:—இந்த்ரன் செய்த உபதேசமானது, ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா—"ஏஷ ஸர்வபூதாந்தராத்மா.... ஏகோ நாராயண:" என்னும் சாஸ்த்ரத்தைக் கொண்டே செய்யப்பட்டது. வாமதேவவத்—வாமதேவர் என்னும் மஹர்ஷி உபதேசம் செய்ததுபோல. வாமதேவர் அம்மாதிரி உபதேசம் செய்திருப்பதாக ப்ருஹதாரண்யோபநிஷத்தில் காணப்படுகின்றது. பரமாத்மா ஜீவாத்மாவைச் சரீரமாக உடைத்தா யிருக்கிறபடியால், ஜீவாத்மாவைக் குறிக்கும் 'நீ' 'நான்' என்னும் சப்தங்கள் பரமாத்மாவினிடத்தில் பர்யவஸாநம் அடையும் என்பது சாஸ்த்ரம். இந்தச் சாஸ்த்ரத்தைக் கொண்டு, 'ப்ரஹ்மா' 'சிவன்' முதலானவர்கள் சில காரணவாக்யங்களில் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டிருந்தால், அவ்விடங்களில், 'ப்ரஹ்மா' 'சிவன்' இத்யாதியான சப்தங்கள், அவர்களுள் அந்தர்யாமியாக இருக்கும் நாராயணனிடத்திலேயே முடிவடைகின்றன என்று நாம் கொள்ளவேண்டும் என்பது கருத்து.

வாக்யே தயோரிந்த்ராதிதுல்யதயா தத்விபூதித்வ ப்ரதிபாதநாத்; ஆகாஶப்ராணாதிஶப்தை: பரம் ப்ரஹ்மாபிஹிதமிதி ஸூத்ரகாராகாஶப்ராணாதீநாம் யதா ந பரத்வம் ।

யத்த்வநைராஶங்கிதம்—"அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம, தஹரோ஽ஸ்மிந்நந்தராகாஶ:, தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம், தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்" [சா. 8—1] இத்யத்ர ஆகாஶஶப்தேந ஜகதுபாதாநகாரணம் ப்ரதிபாத்ய ததந்தர்வர்திந: கஸ்யசித் தத்வவிஶேஷஸ்ய அந்வேஷ்டவ்யதா ப்ரதிபாத்யதே; அஸ்யாகாஶஸ்ய நாமரூபயோர்நிர்வஹணத்வஶ்ரவணாத் பராத்மஸ்ஸ்தைவ பராத்மஸ்தி

படமாட்டாது; ஏனென்றால், அநந்யபரமான இந்த நாராயணாநுவாகத்தில், 'அந்த ப்ரஹ்மா முதலான எல்லாரும் இந்த்ரன் போல ப்ரஹ்மத்தின் வீபூதிகளுள் அகப்பட்டவர்களே' என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? சிற்சில ச்ருதி வாக்யங்களில் 'ஆகாசம்' 'ப்ராணன்' இவை முதலிய சப்தங்களால் பரப்ரஹ்மம் வ்யவஹரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காரணத்தால் 'பஞ்ச பூதங்கள் ஸம்பந்தங்களான ஆகாசம் ப்ராணன் முதலியவைகளையே பரதத்வமென்று ச்ருதி சொல்லுகின்றது' என்று சொல்லக்கூடுமோ?

யத்த்வநைர்......மற்றும் சிலர் பின் வருமாறு ஒரு ஆக்ஷேபம் செய்கிறார்கள். "அத யதிதமஸ்மிந்...." இத்யாதியான சாந்தோக்ய வாக்யத்தில், 'ஆகாசம்' என்னும் சப்தத்தால் ஜகத்தின் உபாதாந காரணத்தை ப்ரதிபாதித்து, அந்த ஆகாசத்துக்குள் இருக்கும் ஒரு தத்வ விசேஷமே நம்மால் தேடப்படவேண்டிய வஸ்து என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ஆகாசமே ஜகத்திலுள்ள பொருள்களெல்லாவற்றுக்கும் பெயர் ரூபம் இவைகளை நிர்வஹிக்கின்றது என்றும் இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டி

தயோரிந்த்ராதிதுல்யதயா—ப்ரஹ்மா சிவன் முதலானவர்கள் இந்த்ரனுடன்கூட ஒரே பங்க்தியில் பரமாத்மாவின் விபூதிக்குள் அகப்பட்டவர்களாகப் படிக்கப்பட்டிருக்கிறார்கள். "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்ர: ஸோঽக்ஷர: பரம: ஸ்வராட்" என்பது இந்த அநுவாக வாக்யம்.

ஆகாஶப்ராணாதிஶப்தை—சாந்தோக்யத்தில் ஓரிடத்தில் "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ஆகாஶாதேவ ஸமுத்பத்யந்தே...ஆகாஶ: பராயணம்" [ஆகாசத்திலிருந்தே இந்த பூதங்களெல்லாம் உத்பத்தியை அடைகின்றன...... ஆகாசம்தான் மற்றை எல்லாவற்றுக்கும் உத்க்ருஷ்டம், பராயணம்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இம்மாதிரியே மற்றோரிடத்தில் "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ப்ராணமேவாபிஸம்விஶந்தி" [ப்ராணனே ஜகத்காரணமான வஸ்து] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வாக்யங்களுக்கெல்லாம் வேதாந்திகளெல்லாரும், 'ஆகாசம் ப்ராணன் முதலான சப்தங்களால் பரமாத்மாவே சொல்லப்படுகிறான்' என்றும், 'பூதாகாசம் முதலானவைகள் சொல்லப்படமாட்டா' என்றும் அர்த்தம் செய்திருக்கிறார்கள். அந்த ந்யாயத்தை அவலம்பித்து, ப்ரக்ருதத்தில், 'ப்ரஹ்மா' 'சிவன்' முதலான சப்தங்களுக்கும் பரமாத்மாவே பொருள் என்று கொள்ளவேண்டும் என்பது தாத்பர்யம்.

யத்த்வநைர்—இவ்விடத்தில் 'வ்யோமாதீத வாதம்' என்று வ்யவஹரிக்கப்

நாமரூபயோ: கர்த்ருத்வஶ்ரவணாத் ஆகாஶ ஶப்தாபிதேயாத் புருஷாத் அந்யஸ்ய அந்வேஷ்டவ்யதயா உபாஸ்யத்வம் ப்ரதீயதே' இதி ததேதத் அநதீதவேதாநாம் அத்ருஷ்டபாஷ்யவிதாம் சோத்யம் | யதஸ்தத்ர ஶ்ருதிரேவாஸ்ய பரிஹாரமாஹ, வாக்யகாரஶ்ச | "தஹரோऽஸ்மிந்நந்தராகாஶ: கிம் தத்ர வித்யதே யதந்வேஷ்டவ்யம் யத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்" இதி சோதிதே, "யாவாந்வா அயமாகாஶஸ்தாவாநேஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ:" இத்யாதிநா அஸ்ய ஆகாஶஸ்யோபமாநம் அஸ்ய பரவைலக்ஷண்யம் அநவதிகமஹத்த்வம் ஸகலஜக-

---

ருக்கிறபடியால், ஆகாச சப்தத்தால், ஜகத்திலுள்ள பொருள்களுடைய பெயர் ரூபம் முதலியவைகளுக்குக் கர்த்தாவாகப் புருஷஸூக்தத்தில் சொல்லப்படும் புருஷனே குறிக்கப் படவேண்டுமென்றோ ? அந்த ஆகாசத்துக்குள் இருக்கும் ஒரு தத்வ விசேஷமே, தேடப் படவேண்டிய வஸ்து என்று இந்த ச்ருதி சொல்லும்பக்ஷத்தில், அது 'அந்தப் புருஷனைக் காட்டிலும் வேறுபட்ட தத்வ விசேஷமொன்று உண்டு; அதுவே தேடப்படவேண்டிய வஸ்து' என்பதைக் குறிக்கவில்லையா ? இதுதான் இவர்கள் செய்யும் ஆக்ஷேபம். இது;அந்தச் சாந்தோக்ய ச்ருதியில் பூர்வ அபர வாக்யங்களை ஸமக்ரமாகப் படியாமலும் வாக்யகாரருடைய க்ரந்தத்தைப் பாராமலும் இருக்குமவர்களால் செய்யப்படும் ஆக்ஷேபம். ஏனென்றால், அந்த ச்ருதியிலேயே இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநம் சொல்லப்பட்டிருக்கின்றது ; வாக்யகாரரும் இதற்கு ஸமாதாநம் சொல்லியிருக்கிறார். இந்தச் சாந்தோக்யத்தில் ப்ரக்ருத வாக்யத்திற்குப் பிற்பாடு, "தஹரோऽஸ்மிந்நந்தராகாஶ: கிம் தத்ர வித்யதே யதந்வேஷ்டவ்யம் யத்விஜிஜ்ஞாஸிதவ்யம்'

படும் வாதமொன்று அநுவதிக்கப்பட்டு நிராகரிக்கப்படுகின்றது. வ்யோமாதீத வாதிகள் சாந்தோக்யத்தில் காணப்படும் ஒரு வாக்யத்தை ஆதாரமாகக்கொண்டு, புருஷஸூக்தாதிகளால் ப்ரதிபாதிக்கப்படும் நாராயணன் என்னும் புருஷனைக்காட்டிலும் வேறு உத்க்ருஷ்டதரமான வஸ்துவொன்று இருக்கின்றதென்றும், அதுதான் பரமபுருஷார்த்தத்தை அடையவேண்டுமென்று இச்சிப்பவரெல்லாராலும் உபாஸிக்கத் தகுந்தது என்றும் வாதிக்கிறார்கள். அந்தச் சாந்தோக்ய வாக்யத்தில் நாராயணன் 'ஆகாச' சப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகிறபடியால், இந்த வாதிகளுக்கு 'வ்யோமாதீத வாதிகள்' என்று பெயர். 'வ்யோம' என்பதற்கு 'ஆகாசம்' என்பது பொருள். 'அதீத' என்பதற்கு 'தாண்டின' என்பது பொருள். அதாவது—'ஆகாசம்' என்று வ்யவஹரிக்கப்படும் நாராயணனைக்காட்டிலும் உயர்ந்துள்ள வேறு ஒரு வஸ்துவை பரப்ரஹ்மமாக வாதிப்பவர்கள் என்பது அர்த்தம். அந்தச் சாந்தோக்ய வாக்யம், அப்படிப்பட்ட பொருள் ஒன்றை ப்ரதிபாதிக்கின்றதா என்பது இவ்விடத்தில் விசாரிக்கப்படுகின்றது. அந்த வாக்யத்தின் அர்த்தமாவது—அஸ்மிந் ப்ரஹ்மபுரே—பரப்ரஹ்மத்தின் ஸ்தாநமாயுள்ள இந்த உபாஸகனுடைய சரீரத்தில், யதிதம் தஹரம் புண்டரீகம் வேஶ்ம— அல்பமாகவும் தாமரைப்புஷ்பம் போன்றதுமான யாதொரு ஹ்ருதயமாகிற ஸ்தாநம் இருக்கின்றதோ, அஸ்மிந் தஹர அந்தராகாஶ:—அந்த ஹ்ருதயத்தினுள் யாதொரு அத்யல்பமான ஆகாசமொன்று உண்டோ, அஸ்மிந் யத் தத் அந்வேஷ்டவ்யம் தத்

3L
R650
N31
186802